Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 329 மாசி. February. 2024

Orientalisch
Textilien &
Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
30TH years IN EUROPE
Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

# கேள்விக்குள்ளாகும் பொது மன்னிப்பு

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

Dr.IN



## காதலும் திருமணமும்

## கடற் கவிதை

“Wildlife Photographer”: Mr. L. Mohanaraj

இனிய காதலர் தின வாழ்த்துகள்

Happy Valentine's Day -Feb 14

இதழ்: 329








# அப்பவும் இப்பவும் என் பக்கத்து சீட் அவள்!

அப்ப எல்லாப் பெண்களும் அழகுதான்,ஆனால் அவள் எனக்குப் பேரழகி அவ்வளவுதான். பாடசாலையில் படிக்கும் காலத்தில்,படிப்போடு,சங்கீதம், பரதநாட்டியம், இரண்டிலும், அவள் உச்சம். பாடசாலை நிகழ்ச் சிகள் அனைத்திலும், இருப்பாள்.

காலையில் பாடசாலை ஆரம்பிக்கும் போது, ஒலிபெருக்கியில் தேவாரம் அவள்தான், பாடுவாள். திங்கள் முதல் வெள்ளி வரை அவள்தான். அந்த ஒரு சில நாட்களைத்தவிர.



● மாதவி

தேவாரம் பாடத் தொடங்கியதும், யார் நடந்து வந்துகொண்டு இருந்தாலும், அந்த இடத்தில், அதிபராக இருந்தாலும் அவர் அகலாது நிற்க வேண்டும். இது எமது பாடசாலை ஒழுங்கு முறையில் இருந்தது. நான் அவள் பாடி முடிந்த பின்பும் ஒரு நிமிடம் நிற்பேன். ஆண்டவனை நினைத்து அல்ல, அவளை நினைத்து. எனக்கு பாடசாலையின் ஒழுங்கு முறையில் அது மிகவும் பிடித்து இருந்தது. பொதுவாகக் கலைஞர்களுக்கு ஒரு வசதி, அவர்களை யார் வேண்டுமானாலும், ரசிக்கலாம், பார்க்கலாம், எவரும் அதனை பிழையாக எடுக்க மாட்டார்கள்.

இல்லை என்றால் ஆண்களின் அறைகளில், கே.ஆர்.விஜயா,காஞ்சனா,லக்ஷ்மி, ஷோபா, சில்க்சிமிதா, என்றும், பெண்களின் அறையில், ரஜினி, கமல், மோகன், மைக்கல் ஜாக்சன் என்றும் எவரும் புகுந்திருக்க முடியாது அல்லவா.

கே.பாலச்சந்தர் அவர்களின் ‘சொல்லத் தான் நினைக்கிறேன்“ படம் வந்து, அந்தப்பாடல் பட்டி தொட்டி எங்கும் பரவிய காலத்திலும், சொல்லாமல் போன காதல் தங்களதுதான் என பலர் நினைப்பதுபோல, நானும் தான் நினைக்கின்றேன்.

ஒரே பாடசாலை, ஒரே வகுப்பு, இருந்தும், கதைப்பது குறைவு. அப்போ ஒரு ஆணும், பெண்ணும், அதிகமாகக் கதைத்தால் காதல் மட்டும்தான் காரணம் என்றான ஒரு காலமது.

இப்பொழுது எல்லாம் ஒருவர் எங்கு நிற்கிறார், ஏது செய்கிறார் என்பதைப் பார்க்க அப்ஸ் நிறைய உண்டு. ஆனால் எந்த அப்ஸ்சும் இல்லாத காலத்திலும், அப்போது எனக்கு அவள் எங்கு நிற்கிறாள், என்ன செய்கிறாள் என்பதை நானும் அறிவேன்.

அது ஆச்சரியம் தான். ஆனாலும் உண்மை. வேண்டும் என்றால் உங்கள் வாழ்வோடு உரசிப்பாருங்கள், அது உண்மை என்பதை உணர்வீர்கள்.

எனக்கு அவள் மீது ஒரு கோவம். அது ஏன் எல்லா மாணவர்களுடனும் ஒரு சிரிப்பு என்றாலும், உதிர்வாள், என்னைக் கண்டால் எதுவுமே இல்லை. என்னைக் கண்டதும் என்ன உதிர்ந்து போகிறாளா?

நான் தான் அவளைப் பின் தொடர்ந்தேன். எந்த நிகழ்ச்சியில் எந்தப்பாடலுக்கு அவள் ஆடினாள், என்ன உடை,யாவும் தெரியும்.

ஏன் அந்தப்பாடலை இப்ப கேட்டாலும், அவள்தான் என் மனதில் ஆடுவாள். இப்படியாக அன்று, நான் தனியாகப் பேசி. தனியாக இரசித்தவன்.

இன்று அறுபது வருடங்களின் பின் விமானத்தில் அவள் என்பக்கத்தில் வந்து அமர்ந்தாள்.


எல்லோரும் ஏறிவிட்டார்கள், எனக்கு பக்கத்து சீட் காலியாக இருக்கிறது. அப்பாடி என எண்ணி இருந்த எனக்கு இப்படியாக ஒரு பேசாமடந்தை என்னருகில் வந்து அமர்ந்தது, ஆச்சரியம் என்பதைவிட ஆனந்தமாகவும் இருந்தது.

அவள் பலரைப் பரதக் கலைஞர்களாக உருவாக்கி வருவதால், எப்ப என்ன செய்கிறாள் என்பதை, முன்னைரைவிட இலகுவாக அறியமுடிந்தது.

27 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 329



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# கேள்விக்குள்ளாகும் பொது மன்னிப்பு



இலங்கையிலிருந்து
**ஆர்.பாரதி**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த டி சில்வாவிற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு தவறானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி எந்த அளவுக்கு சட்டவிரோதமான முறையில் செயல்பட்டுள்ளார் என்பதற்கு இது மற்றுமொரு உதாரணம். ஜனாதிபதியின் பொது மன்னிப்பை ரத்து செய்த உயர் நீதிமன்றத்தில் இந்த தீர்ப்பு இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒன்றாக பதிவு செய்யப்படும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவைப் படுகொலை செய்த வழக்கிலேயே துமிந்த சில்வாவிற்கு மரண தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இருந்த



போதிலும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த போது தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி அவருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார். அந்தப் பொது மன்னிப்பு அன்று முதல் சர்ச்சைக்குரிய ஒன்றாக இருந்தது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகளான ஹீருனிக்கா அதற்கு எதிராக மனு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம் கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொது மன்னிப்பு தவறானது என இப்போது – கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்திருக்கின்றது.

இலங்கை அரசியலைப் பொறுத்த வரையில் ஜனாதிபதி ஒருவர் வழங்கிய போது மன்னிப்பு நீதிமன்றத்தினால் ரத்துச் செய்யப்பட்டு இருப்பது இதுவே முதல் தடவை என்பதால், இது தொடர்பில் ஊடகங்களின் கவனம் திரும்பியுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ இப்போதும் பதவியில் இருந்திருப்பாராக இருந்தால் இவ்வாறான ஒரு தீர்ப்பு வந்திருக்குமா என்ற ஒரு கேள்வியும் இருக்கத்தான் செய்கின்றது.

துமிந்த சில்வாவும் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரமும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். அதாவது இருவருமே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கிய உறுப்பினர்கள். 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எட்டாம் திகதி இருவரது ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சமரின்போது பாரத லட்சுமணன் பிரேமசந்திர நடுவீதியில் வைத்துக் கொல்லப்பட்டார். பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவுடன் அவருடைய மூன்று மெய்ப் பாதுகாவலர்களும் இந்த துப்பாக்கிச் சமரின்போது பலியாகினர்.

இருவரும் தமது ஆதரவாளர்கள் சகிதம் வீதியில் நேருக்கு நேர் சந்தித்தபோது இந்த துப்பாக்கி சமர் மூண்டது.

இரண்டு பேரும் கொழும்பு மாநகர சபையின் குறிப்பிட்ட பகுதியை தங்களுடைய கட்டுப்பாட்டுகள் வைத்திருப்பதற்காக நீண்ட காலமாகவே முரண்பட்டுக் கொண்டிருந்தவர்கள். இந்த சம்பவத்தில் துமிந்த சில்வாவும் காயம் அடைந்திருந்தார். கொழும்பிலும் பின்னர் சிங்கப்பூரிலும் அவர் சிகிச்சை பெற்றார்.

வழக்கு விசாரணைகளை தொடர்ந்து துமிந்தவுக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது. இருந்தபோதிலும் அவரைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளில் ராஜபக்ஷக்கள் அக்கறை காட்டியதாக ஒரு குற்றச்சாட்டும் இருக்கின்றது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் துமிந்தவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. நாட்டினுடைய நலன் கருதி இந்த பொது மன்னிப்பை தான் வழங்கியதாக கோட்டாபாய ராஜபக்ஷ சத்திய கடுதாசி ஒன்றில் தெரிவித்திருந்தார். ஆனால் அவ்வாறு அவர் குறிப்பிட்டு இருந்த தேசத்தின் பாதுகாப்பு அல்லது தேசத்தின் நலன் என்பது என்ன என்பதையிட்டு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் இப்பொழுது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. அது தொடர்பான எந்த ஒரு ஆவணமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதனை விட பொது மன்னிப்பு தொடர்பான சட்டமா அதிபரின் வழிகாட்டல்கள் எதையும் முன்னாள் ஜனாதிபதி

04 ஆம் பக்கம் பார்க்க...



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கேள்விக்குள்ளாகும்

பின்பற்றி இருக்கவில்லை என்பதும் தெரிய வந்திருக்கின்றது.

2021 ஜனவரியில் இந்த பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அதனை அடுத்து வந்த ஒரு மாத காலத்திற்கு அந்த பொது மன்னிப்பை எதிர்த்து அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் பலவும் தாக்கல் செய்யப்பட்டன. அதற்குப் பின்னர் சுமார் ஒன்றரை வருடங்கள் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்திருக்கின்றார். இருந்த போதிலும் இந்த மனுக்களை எதிர்கொள்ளத் தேவையாக இருந்த ஆவணங்களை அல்லது கோவைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான எந்த ஒரு செயற்பாட்டையும் ஜனாதிபதியோ ஜனாதிபதியின் செயலகமோ மேற்கொண்டு இருக்கவில்லை. அதிகாரத்தில் தான் இருப்ப தால் இதற்கு எதிராக வரக்கூடிய எந்த ஒரு நிலைமைகளையும் தன்னால் சமாளிக்க கூடியதாக இருக்கும் என ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய நினைத்திருக்கலாம்.

அதே வேளையில் பொது ஜன பெரமுனவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 117 பேர் கையொப்பமிட்ட மனு ஒன்றும் பொது மன்னிப்பு அறிவிப்பு வெளிவர முன்னர் கோட்டாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதிலும் துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அவரது கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய அரசியல் அல்லது வியாபார நலங்களுக்காக இந்த மனுவை சமர்ப்பித்திருக்க முடியும். இரந்தபோதிலும் பொறுப்பு வாய்ந்த ஜனாதிபதியாக இருந்தவர் இந்த மனுக்களை ஏற்றுக் கொண்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை பொது மன்னிப்பு என்ற பெயரில் விடுதலை செய்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என்பது இப்போது உயர்நீதிமன்ற தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. அதே வேளையில் ஜனாதிபதி தன்னுடைய நிறைவேற்று அதிகாரங்களின் கீழ்வரகூடிய பொது மன்னிப்பை வழங்குவதற்கான அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கின்றார் என்பதும் இந்த நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அம்பலமாகியிருக்கின்றது.



அதி உயர் பதவியில் இருப்பவர்கள் தங்களுடைய உறவினர்களையும் அரசியலுக்கு தமக்குத் தேவையாக இருப்பவர்களையும் பாதுகாப்பதற்கு அதிகாரத்தை பயன்படுத்துவது என்பது இலங்கையை பொறுத்தவரையில் புதிதல்ல. கோட்டாபய ராஜபக்ஷாவினால் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி விடுதலை செய்யப்பட்ட மற்றும் ஒரு விவகாரமும் சர்ச்சைக்கு உள்ளானதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மிருசுவில் பகுதியில் எட்டு பொதுமக்களை படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரியான சுனில் ரட்னாயக்கவுக்கு நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியிருந்தது. இருந்தபோதிலும் அவரையும் கோடாபாய் ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார்.

சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு இருக்கக்கூடிய செல்வாக்கை மேலும் அதிகரித்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டேதமிழ் மக்கள் எட்டு பேரை படுகொலை செய்ததற்காக நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்திருந்தார். அந்தப் பொது மன்னிப்பு கூட மனித உரிமைகள் அமைப்புகள் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இதற்கு எதிரான மனுக்களும் உயர் நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்யப்பட்டு இருக்கின்றன. எது குறித்து விசாரணைகளும் இப்போது இடம் பெற்று வருகின்றது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வாறு அமையும் என்பதை தான் இப்போது அனைவரும் எதிர்பார்த்துள்ளார்கள்.

# பழையோள்



கவிதா லட்சுமி (நோர்வே)

கண்
விழித்தபோது
காணாமல்
போயிருந்தது
சூலம்.

மார்புக் கச்சை
முடிந்திருந்த
விட நாகங்கள்
எங்கே?

வெறுங்கூடாய்
இருக்கிறதென்
திரள் திமிர்
மார்பு!

யானைத் தோல்
போர்வையை
தோள்களிலிருந்து
எவர் பறித்துச்
சென்றது?

இடை
சுற்றியிருந்த
புலித்தோல்
போனது எங்கே?

பிறையையும்
காணோம்!

களவாடப்பட்டிருக்கின்றன
வேட்டையாயுதங்கள்!

விரல் பிடித்தபடியும்
இடுப்பில் ஒன்றுமாய்
இரண்டு குழந்தைகள்!

நிர்வாணமாக
நிற்கிறேன்.

என்
நஞ்சுண்ட கண்டம்
அறுக்கப் படாமலேயே
இடம் மாற்றப்பட்டிருக்கிறது!

ஒரு காலில் சிலம்பும்
மறு காலில் கழலும்
பறி போயிருக்கின்றன!

என் மானோ
பிறத்தியான் தோட்டத்தில்
மேய்கிறது!

மேனியில்
பாகம் பிரித்து
ஒருவன்
உடலில் பொருத்திச்
சமரசம் செய்கின்றனர்!

என்
முக்கண்களில் ஒன்று
அவன்
நெற்றியிலிருந்த போதே
நான்
விழித்திருக்க வேண்டும்!


எது
போனால் என்ன?

என்
வேட்டைக்குணம்
தகிக்கும் வரை..

நான்
கொற்றவைதான்!

ஒளிப்படம்:
(கைலாசநாதர் கோவில் காஞ்சிபுரம்)



மு.க.சு.சிவகுமாரன்

# யேர்மனியில் கோர்லின் நகரில் பூத்துக்கிடக்கும் காதலர் பூட்டுக்கள்

யேர்மனியில் கோர்லின் நகரில் றைன்நதி பாலம் (Hohen zollernbruecke bridge in Cologne, Germany) புகையிரத நிலையத்தை அண்டிய பகுதி, பெரிய தேவாலத்திற்கும் அருகில் இந்த காதல் பூட்டுக்கள் (Love Locks) அமைந்துள்ளது.

காதலர்கள் தங்கள் காதல் நினைவாக செய்யும் லீலைகள் நாடு, மொழி, மதம், கடந்து நிற்கின்றது. காதலுக்கு கண்ணில்லை என்றானபோது நாடென்ன மதம் என்ன.

நமது தாய்மண்ணில் காதலுக்காக வரைந்த ஓவியங்கள் இன்றும் மரங்களில் இருக்கின்றது. மரத்தில் இதயம் வரைவதும், காதலன் காதலி பெயர் பொறிப்பதும், ஓர் அலாதியான இன்பக்கொண்டாட்டம். மரங்கள் மட்டுமா பாடசாலைச் சுவர்கள், போக்குவரத்து பஸ்களின் இருக்கைகள் என்று எங்கு பார்தாலும் ஓவியமாக பெயர்களை எழுதிவைப்பார்கள். இது ஒரு வகை காதல் ஓவியம்.

அது எமது நாட்டில். இந்த எழுத்து ஓவியங்கள் இங்கும் உண்டு. காதலன் காதலி கண்ணில் அடிக்கடி படும் இடங்களில் எல்லாம் இந்த காதல் ஓவியங்களும் பெயர்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்தப் பெயர்களில் என்னதான் இருக்கு என்று கேட்டுவிடாதீர்கள். அது காதலர்களுக்கு வெறும் பெயர்கள் அல்ல அதுவே அவர்களுக்குப் பிடித்த கவிதையாகவும் இருக்கும். சிலசமயம் அதுதான் அவர்களது தேசியகீதமாகவும் இருக்கும். காதலை வெளிப்படுத்தவும் அது வழியாக இருக்கலாம்.



பாரீஸ் பாலத்தில் பூட்டுக்களின் பாரம் தாங்க முடியமால் அதனை அகற்றல்

அங்கு அந்த பாலத்திற்கு (the Hohenzollern Bridge ) வரும் காதலர்கள் தாங்கள் வாழ்வில் பிரிவது இல்லை என்ற மன உறுதியுடன் தங்கள் காதல் என்றும் நிலைத்திருக்க ஒரு பூட்டை அந்த கம்பிவலை வேலியில் ஒரு இடத்தில் பூட்டிவிடுவார்கள். பூட்டப்பட்ட இந்த இணைப்பு இனி விடுபட வேண்டியதே இல்லை. அந்தத்தேவையும் இல்லை. எனவே இதயப்பூட்டுள் காதலர்கள் தம்மை உள்வைத்து பூட்டிவிட்டு, இனிவாழ்வில் காதலைவிட்டு இருவரும் வெளியேறுவது இல்லை என்ற முடிவுடன் பூட்டிய சாவியையும் நதிக்குள் வீசிவிடுவார்கள்.

இப்படி ஆயிரம் ஆயிரம் கதாலர்கள் தினம்தோறும் தம்மைத்தாமே இதயச் சிறக்குள் பூட்டிவிட்டு, திறப்பை மகிழ்வாக எறிந்து விடுவார்கள். படத்தில் பாருங்கள் எத்தனை பூட்டுக்கள். இரு பக்கமும் அழகிய பல வண்ணப் பூட்டுக்களால் நிறைந்திருக்கும். பெரும்பாலான பூட்டுக்களில் எல்லாம் அவர்களது பெயரும் திகதியும் பொறித்திருக்கம்.

இந்த காதல் கலாச்சாரம் எத்தனையோ நூறுவருடங்களுக்க முன் இத்தாலியில் இருந்து வந்திருக்கலாம் என்று அறிப்படுகின்றது. இந்தப் பூட்டுக்கள் பல வடிவில் இருக்கும் சில இதயம்போல், சில



வர்ணத்தில் அமைந்ததாக மற்றும் சில சைக்கிள் பூட்டில் தொங்கும் பூட்டுக்காக என்று பல வடிவமாக இருக்கும். இவர்களது காதல் நிலைக்கிறதோ இல்லையோ பூட்டுவிற்பனையாளரது வாழ்வு நிலைக்கும் அது நிச்சயம்.

பாலத்தில் இருக்கும் பூட்டுக்களின் நிறை இரண்டு தொன்னையும் தாண்டிவிட்டது. இந்த காதல் பூட்டுக்கள் யேர்மனியில் கம்பேர்க் நகரிலும் மற்றும் கனடா (வன்கூவர்) பாரிஸிலும் உள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் பாரிசில் உள்ள பாலத்தின் ஒரு பகுதி பூட்டின் பாரம் தாங்க முடியாமல் இடிந்து விழுந்த சம்பவமும் நடைபெற்றது.

இப்பூட்டுக்களை பூட்டிய காதலர்கள் காதல் கனிந்து மகிழ்வில் இருப்பவர்கள், அந்த இடத்திற்கு வந்து தமது நினைவுகளை மீட்பார்கள். ஒரு காதலன் கூறுகையில் ‘ நாம் ஒருவேளை சேரமுடியாது பிரிந்து விட்டாலும், நாம் இவ்விடத்தை மீண்டும் ஒரு முறைவந்து பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டால் நீ நம்பு! ‘நான் உனக்காக இங்கு காத்து இருகின்றேன்“ என்று!

சத்தியம் செய். நான் உன்னை மறக்க மாட்டேன் என்று. எனக்கு நூறு வயதானாலும்!

காதல் வெற்றிபெற்றால், அது மிக இனிமையானது. அதுவே தோற்றுப் போனால் மிகவும் வலியானது.

இப்படி பல காதல் வசனங்கள் காற்றாக அந்தக்காதல் பூட்டுக்களை தினம் வருடியவண்ணம் வீசுகின்றது.

ஆசை வெட்கம் அறியாது. அங்கு காதலர்கள் ஆங்காங்கு அது உண்மை என்பதை காட்டியவண்ணம் இருப்பார்கள்.

நீங்களும் யேர்மனியில் இந்த நகரத்திற்கு போனால் பாருங்கள். புகையிரதத்தில் அந்த பாலத்தைதாண்டிச் சென்றால் கவனியுங்கள், பூட்டுப்பூட்டாக பூத்திருக்கும் காதல் மொட்டுக்களை.

எமது அந்தக் காலத்தை எண்ணிப் பார்த்தால் காதல் என்றால் எதோ ஒரு குற்றச் செயல்போல! அன்று இருந்த பெரியவர்கள்



எம்மைப் பார்த்தார்கள். இப்படிப் பார்த்தால் எத்தனையோ காதலர்கள் பூட்டையும், திறப்பையும் தொலைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். ஒரு பார்வைக்காகத் தவம் இருந்த காலம். அது இன்றும் இனிக்கும்.




Luckyfly
SUMMER 2024
QATAR
Travel around the World
வரவிருக்கும் 2024 SUMMAR-க்கு உங்கள்
குடும்பத்துடன் சென்று வர இப்போதே
உங்களது டிக்கெட்டினை குறைந்த விலையில்
முன்பதிவு செய்யுங்கள்...
FEBRUARY
MARCH
COLOMBO TO JAFFNA
கொழும்பு AIRPORT இல் இருந்து
JAFFNA வரை..
உங்கள் வீட்டு வாசலில் வரை இந்த சேவை
49€ ONLY
PER PERSON
ab.799€
FOR MORE DETAILS
0234 2399032
0179 14 84892
info@lucky-fly.de
www.lucky-fly.de




# நிற்கக்கூட நேரமில்லை நேரம் பறக்கிறது

நாமெல்லாம் தற்போது அடிக்கடி சொல்லிக்கொள்ளும் வார்த்தைகள்தான் இவை .பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்புவரை ஒரு வருடம் என்பது மிக நீண்ட காலப்பகுதியை உள்ளடக்கியதாகவே உணர்ந்திருப்போம் நாம். கலண்டர்கள் அழுக்கடைந்து, கிழிந்த நிலையில் நாட்களின் நகர்வுகளைக் காட்டிக்கொண்டிருந்த காலம் மறைந்து போய், சுவற்றில் மாட்டிய கலண்டர்கள் புத்தம் புதிதாகவே இருக்க ஆண்டுகள் மட்டும் ரொக்கெர்ட் வேகத்தில் பறந்துகொண்டிருக்கின்றது என்றால் மிகையில்லை .

காலையில் எழுந்தது முதல் இரவு நித்திரைக்குச் செல்லம்வரையிலும் ஓடிக்கொண்டேதான் இருக்கின்றோம்,ஆனாலும் செய்துமுடிக்கவேண்டிய வேலைகள் ஏராளமாக எஞ்சியிருக்கின்றதே என நம்மில் அநேகர் புலம்பிக்கொண் டேயிருப்போம் இல்லையா? உண்மையில், நேரத்தை திட்டமிட்டு சரியாக பயன்படுத்துபவர்களால் மட்டுமே இனி எதிலும் வெற்றிபெற முடியும். அதை பயன்படுத்த தெரியாதவர்கள் 'நேரம்' இல்லையே என்று கூறி, தங்களையே வதைத்துக் கொள்ளவேண்டியதுதான். " நேரமின்மை " என்பது வாழ்க்கையில் வரும்பட்சத்தில், ஒரு நாளைக்கு ஐம்பது மணி நேரம் கொடுத்தாலும் போதாது என்றுதான் வார்த்தை வரும். இருக்கின்ற நேரத்தை நல்ல முறையில் திட்டமிட்டு, தேவைக்கேற்றபடி,நேரம் நம்மை நிர்வகிக்க முடியாமல், நேர-த்தை நாம் நிர்வகித்தால் மட்டுமே தப்பிக் கொள்ளவியலும்.

தகவல் தொழில் நுட்பம், போக்குவரத்து வசதிகள், பொருளாதார மேம்பாடு என எல்லாவற்றிலும் முன்னிலை யடைந்திருக்கும் சூழ்நிலையில் (எல்லாம் இருந்த இடத்திலேயே கிடைக்கும்போது) நமக்கான வேலை எல்லாம் விரைவாக முடிக்கும் சூழ்நிலை இருந்தும், குடும்பப் பெண்களோ அல்லது வெளிவேலைகளில் ஈடுபட்டிருக்கும் ஆண் பெண் இருப்பாளரிடமோ,இளைஞர்களிடமோ 'நேரம்' என்பது போதாது என்ற மனநிலை தான் இருக்கின்றது. நேரத்தை விடவும் தங்களுடைய வேலைப்பழு அதிகமாக காணப்படுவதனால் நேரம் போதாமல் போய்யுள்ளது என பலர் கருதுகின்றனர். இந்த நேரமின்மையின் வெளிப்பாடு தான் எல்லா வேலைகளிலும்



அவசரம், பதற்றம், கவனமின்மை, ஞாபகமறதி, தூக்கமின்மை, மனவழுத்தம் போன்றவை. இந்த நிலை தொடரும்போது வாழ்க்கையின் ஒன்றாகவே அது மாறி விடுகி ன்றது என்பதுதான் பரிதாபம். "எனக்கு நிற்க நேரமில்லை" என கூறுகிறவர்கள் உண்மையில் நேரத்தைச் சரியாகப் பங்கீடு செய்யத் தெரியாதவர்களே. நேரத்தை எல்லோருமே ஏதோ ஒரு வகையில் செலவழித்து விடுகிறார்கள். ஆனால் செலவழித்த அனைவருமே வெற்றி வாகை சூடுவதில்லை. அதிக வேலையிருக்கிறவர்கள் நேரத்தை வீணாகக் கழிக்க மாட்டார்கள். நேரத்தை எந்த அளவுக்கு சிக்கனமாக, முழுமையாக, முறையாக பயன்படுத்துகிறோம் என்பதில்தான் வெற்றியின் ரகசியமே அடங்கியிருக்கிறது.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

நம்முடைய வாழ்வில் நமக்கு கிடைத்துள்ள அரும்பெரும் பொக்கிஷங்களுள் மிகவும்ன் முக்கியமானதொன்றே நேரம். அந்த வகையில் நேரம் பொன்னானது என்ற பொன்மொழி நேரத்தை வீணடிப்பது வாழ்க்கையை வீணடிப்பதற்கு சமம் என்பதனையே எடுத்துச் சொல்கின்றது. நேரத்தின் பெறுமதியை யாராலும் குறிப்பிட்டு சொல்லிவிடவியலாது. அதாவது முன்னைய காலங்களில் நேரம் பொன்னானது என்று பாவித்தாலும் கூட தற்போதெல்லாம் நேரம் பொன்னை விட மேலானது என்றே கருதவேண்டியுள்ளது.

நேரத்தினை யாராலும் கட்டுப்படுத்தி நிறுத்த முடியாது அது ஓடிக்கொண்டேதான் இருக்கும். ஒரு நாளின் நேரம் அன்றைய நாளுடனேயே முற்றுப்பெறுகின்றது. அடுத்த நாள் புதிய நேரமே எமக்கு கிடைக்கின்றது.

எனவே ஒரு நாளில் நாம் பயன்படுத்தாத அனைத்து நேரமும் வீணாகவே முடிவடைந்துவிடுகின்றது . அவை அடுத்த நாள் எமக்கு கிடைப்பதில்லை. அதனால் தான் நேரம் பெறுமதியானது அதனை வீணடிப்பதை நாம் தவிர்ந்து கொள்ள வேண்டும். அதிலும் எதற்கெடுத்தாலும் நாளை பார்த்துக்கொள்ளலாம் என விட்டுவிடுவது நமக்கு நமே குழி தோண்டிக்கொள்வதைப் போன்றதே . சிலர் எதற்கெடுத்தாலும் நேரமும் காலமும் கைகூடி வரவேண்டும் என காத்துக்கொண்டிருப்பார்கள்.ஆனால் நேரம் யாருக்காகவும் காத்துக்கொண்டிராது செவ்வனே ஓடிக் கொண்டேதானிருக்கும் . நாம்தான் அந்த நேரத்தினை திறமையாக கையாளத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு நாளில் செய்துமுடிக்க வேண்டிய வேலைகளை பட்டியலிட்டுக்கொண்டு கடகடவென செய்து முடிப்பது,அதிலும் அவசரமாக செய்து முடிக்க வேண்டிய விடயங்களை எதற்காகவும் ஒத்திப்போடாது உடனடியாக செய்துமுடிப்பது என நேரத்தை முகாமைப்படுத்திக்கொள்ளும்போது,நேரம் இல்லையே என எதற்கெடுத்தாலும் அலட்டிகொள்ளத் தேவையிராது.

28 ஆம் பக்கம் பார்க்க...





# புறம் பேசுபவர்களைப் புறந்தள்ளுங்கள்!

இன்றைய இயந்திர உலகில் தாம் செய்ய வேண்டிய வேலைகளுக்கு நேரம் இருக்கின்றதோ இல்லையோ பிறரைப் பற்றிய விமர்சனங்களுக்கு ஏதோ ஒரு வழியில் நேரம் ஒதுக்கிக்கொண்டிருக்கும் விந்தை மனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். மகிழ்ச்சியாகக் கூடும் விழாக்களிலிருந்து துக்கம் சார்ந்த நிகழ்வுகள் வரை இவர்களது புறம்பேசும் குணம் வேலை செய்து கொண்டேயிருக்கும். தமது செயல் மற்றவர்களை எவ்வளவு காயப்படுத்தும் என்பது பற்றியோ



அவர்கள் பேசுபொருளின் உண்மைத்தன்மை பற்றியோ அவர்களுக்குக் கவலையில்லை.

விமர்சனங்கள் நேர்மையாக இருப்பின் அதை ஏற்றுக்கொள்வதிலும் சரியாக மாற்றிக் கொள்வதிலும் தவறில்லை. இன்று வைக்கப்படும் பெரும்பாலான விமர்சனங்கள் அனைத்துமே காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது. இவ்வாறு குறை பேசுபவர்கள் தனிமனிதனின் வெற்றி குறித்தோ,திறமை குறித்தோ அவர்கள் வாழ்க்கை குறித்தோ எண்ணுவதில்லை. அவர்களுக்கு வேண்டுவதெல்லாம் முதுகின் பின்னால் பேசுவதற்குச் சில கதைகளும் அவர்கள் சொல்லுவதை நம்புவதற்குப் பல மனிதர்களும்தான். இக்கூட்டத்தின் செயல்களால் மனமுடைந்த பலர் தங்கள் இயல்பு வாழ்வை வாழமுடியாமல் தவித்துப் போய்விடுகின்றனர். எது சரி, எது பிழை என்பதைத் தாண்டிக் காழ்ப்புணர்ச்சியோடு வெளிப்படுத்தப்படும் விமர்சனங்கள் பலரது வாழ்வைச் சிதைத்துவிடுகின்றது.

இப் புறம் பேசுபவர்களின் உலகம் உண்மையைக் காட்டிலும் கற்பனா சக்திக்கே அதிகம் முக்கியத்துவம் கொடுக் கின்றது. இத்தகையவர்களின் கதைகளுக்குச் செவி சாய்த்து வேதனைப்படத் தொடங்கினால் நம் வாழ்க்கை நிம்மதியற்றதாகிவிடும். இவர்களை நாம் எவ்வாறு எதிர்கொள்கின்றோம் என்பதில்தான் எம் வெற்றி தங்கியுள்ளது.

“இந்த விமர்சனங்கள் என்னை எதுவும் செய்யப் போவதில்லை. நான் இந்த விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்“ என்ற எண்ணமே உங்களை வாழ்வின் சரியான திசையை நோக்கிப் பயணிக்க வைக்கும். தவறு செய்யாத மனிதர்கள் என யாருமே இந்த உலகில் இல்லை. ஆனால் உங்கள் தவறுகளை மட்டும் பூதாகரமாக்கி விமர்சிப்பதற்காய் காத்திருப்பார்கள். தங்கள் பிழைகளை மறைக்கப் பிறர் பிழைகளைப் பெரிதுபடுத்த வேண்டிய கட்டாயம் பலருக்கு உள்ளது. தங்களை நல்லவராகக் காட்டிக்கொள்ளப் பிறரைத் தவறாகச் சித்தரிப்பது உலக வழக்கமல்லவா.

உங்கள் மீது தவறிருந்தால் திருத்திக் கொள்ளுங்கள், தவறில்லாத சந்தர்ப்பங்களில் வரும் விமர்சனத்தைக் கண்டுகொள்ளாதீர்கள். தனது முதுகின் அழுக்கை மறந்து உங்கள் முகத்தில் அழுக்கைத் தேடுபவர்களின் எந்தக் குற்றச்சாட்டும் உங்களைத் தாழ்த்திவிட அனுமதிக்காதீர்கள்.



பொலிகையூர்
**ரேகா**
(இங்கிலாந்து)

நீங்கள் எதைச் செய்தாலும் குறை சொல்பவர்களை எண்ணிக் கவலை கொள்ளாதீர்கள். அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று கடந்து செல்லப் பழகுங்கள். விமர்சிப்பதை விடவும் அதைக் கடந்து செல்வதற்குத்தான் அதிக பக்குவம் வேண்டும். நாம் செய்கின்ற அனைத்துச் செயல்களுக்கும் மாற்றுக் கருத்துகள் இருக்கும். ஒவ்வொரு தனி நபரின் பார்வையும் வேறுபட்டது. அனைவருமே நம்மைப்போன்று சிந்திக்கமாட்டார்கள். எனவே அவர்கள் நம்மைப் புரிந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. உலகம் அதன்பாட்டில் இயங்குவது போல நீங்கள் உங்கள் செயல்களைச் சரியான வழியில் செய்யுங்கள். உங்கள் மீதான விமர்சனங்களை நேர்மறை எண்ணத்துடன் அணுகுங்கள்.

உங்கள் குறை நிறைகள் பெரிதுபடுத்தப்பட்டு விமர்சிக்கப்படுகின்றதென்றால் நீங்கள் வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகப் பொருள் கொள்ளுங்கள். உங்கள் செயல் வேகத்தை அதிகரியுங்கள். வெற்றி நோக்கிய உங்கள் பயணத்தில் எந்த விமர்சனங்களும் உங்களை வீழ்த்த அனுமதிக்காதீர்கள். விமர்சனங்களை உரமாக்கி வெற்றிக்கு வளம் சேருங்கள். நாம் எப்படி இருந்தாலும் இந்த உலகம் நம்மைப்பற்றி விமர்சிக்கும் என்பதே உண்மை. தரமான விமர்சனங்களை எதிர்கொள்ளுங்கள். இழிவுபடுத்தும் நோக்கிலான விமர்சனங்களைப் புன்னகையோடு புறந்தள்ளுங்கள்.

உங்களை விமர்சிப்பவர்களுக்கு உங்கள் வெற்றிகளே பதிலாக அமையட்டும்.



# எங்களுக்கு உதவி எல்லாம் வேண்டாம்!

ஏற்றமும் இறக்கமும் நிறைந்த இந்த வாழ்வின் மடிப்புகளில் போராடி வாழத்தெரிந்த மனிதர்களின் கதைகள் கனதியானவை. அவ்வாறானதொரு பெண்மணியை இரணைமடுவில் சந்தித்தேன், மழைக்கு ஒழுகுகிற தறப்பாள் கொட்டகையின் கீழிருந்து கச்சானும் மாங்காயும் விற்றுக்கொண்டிருந்தார். அருகில் ஊன்றுதடிகள் இரண்டு சாத்தி வைக்கப்பட்டிருந்தன, தொண்ணூறுகளில் இந்திய இராணுவ நடவடிக்கையின் போது கால்களில் ஒன்றை தொடையோடு இழந்தாலும் நம்பிகையை பற்றிப்பிடித்துக்கொண்டு வாழ்தலுக்காக போராடி வருபவர், தனது மகளின் கணவர் மதுபோதைக்கு அடிமையாகி வாழ்வை தொலைக்க இந்தத் தாயோ மகளையும் மகளின் மகவுகளையும் இச் சிறுவியாபாரத்தின் மூலமாக சுமந்துகொண்டிருக்கிறார்.



வினோதினி
திருநாவுக்கரசு
(இலங்கை)

“எங்கட உரிமையள எண்டைக்கு விட்டுக்குடுத்தமோ அண்டையில இருந்து குடி, போதை எண்டு அழியுது சமூகம்,

எங்களுக்கு உதவி எல்லாம் வேண்டாம், நாங்கள் உழைச்சு சாப்பிடுவம், இந்த போதைய ஒழிச்சுக் கட்டுறதுக்கு ஏதாவது செய்தாலே புண்ணியமாப் போகும்“. பொழிந்துகொண்டிருந்த மார்கழி மழையின் ஓசையையும் மீறி திடமாக வெளிவந்தன அவருடைய சொற்கள்.




காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14




# ‘தினமும் அஸ்பிரின் சாப்பிட்டு வாருங்கள்’

## அது சர்வரோக நிவாரணியின் மறுபிறப்பு

Dr.IN




காய்ச்சலா, தலையிடியா, உடல் உழைவா, மூட்டு வலியா எதுவானாலும் அஸ்பிரின் மருந்துதான். இவ்வாறு அது கைகொடுத்த காலம் ஒன்று இருந்தது. ஆம் சர்வரோக நிவாரணி போலப் பயன்பட்டது. ஆனால் வலியைக் குறைக்கவும், காய்ச்சலைத் தணிக்கவும் வீரியம் கூடியதும், பக்க விளைவுகள் குறைந்ததுமான புதிய மருந்துகள் வந்ததும் அதன் பிரபல்யம் மங்கத் தொடங்கியது. ஆனால் அதற்கு தற்போது சில ஆண்டுகளாக மீண்டும் மவுசு கூடிவிட்டது. மறுபிறப்பு எடுத்துவிட்டது. ஆம்! ‘தினமும் அஸ்பிரின் சாப்பிட்டு வாருங்கள்’ என வைத்தியர்கள் சிபார்சு செய்பவர்கள் தொகை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

### யாருக்கு இது தேவை?

மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்தான நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கும் ஆற்றல் இருப்பதால்தான் மருத்துவர்களால் அதிகம் எழுதப்படும் மருந்தாக அஸ்பிரின் மாறிவிட்டது. ஒருவருக்கு மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்கனவே வந்திருந்தால் அது மீண்டும் வராமல் தடுப்பதற்கு தினமும் அஸ்பிரின் எடுக்க வேண்டியதாக உள்ளது. அது மட்டுமல்லாமல் பக்கவாதம் அல்லது மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளவர்களுக்கும் தேவைப்படுகிறது.




### இவை வருவதற்கான சாத்தியம் அதிகமுள்ளவர்கள் யார்?

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், குருதியில் கொலஸ்டரோல் அதிகமுள்ளவர்கள் ஆகியோருக்கு அதற்கான சாத்தியம் மிக மிக அதிகமாகும். புகைப்பவர்கள், தினமும் அதிகமாக மது அருந்துபவர்கள், அதீத எடையுள்ளவர்கள், உடலுழைப்பு உடற் பயிற்சி அற்றவர்கள், பரம்பரையில் மாரடைப்பு, பக்கவாதம் உள்ளவர்கள் ஆகியோருக்கும் சாத்தியம் அதிகமாகும்.

### அஸ்பிரின் எவ்வாறு உதவுகிறது?

அஸ்பிரின் மருந்தானது குருதியின் உறைதல் (Clotting) தன்மையைக் குறைக்கிறது. உதாரணமாக ஒருவருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது என வைத்துக் கொள்வோம். உடனடியாக இரத்தம் கசியும் இடத்திற்கு வெண்குருதி சிறுதுணிக்கைகள் (Platelets) வந்து குவியும். இவை திரண்டு, இரத்தத்தை கட்டிப்படுத்தி, கசிந்து கொண்டிருக்கும் இரத்தக் குழாய்களின் வாயிலை அடைத்து மேலும் இரத்தம் வெளியேறுவதைத் தடுக்கும்.

ஆனால் இவ்வாறு குருதி உறைந்து கட்டிபடுதல் இரத்தக் குழாய்களுள்ளும் ஏற்படலாம். முக்கியமாக மூளைக்கும், இருதயத்திற்கும் குருதியைக் கொண்டு செல்லும் இரத்தக் குழாய்களுள் ஏற்பட்டால் அது ஆபத்தானது. கொலஸ்டரோல் காரணமாக அவை இரத்தக் குழாய்க்குள் படிந்து அவற்றின் இரத்தம் பாயும் பாதையை ஏற்கனவே ஒடுங்கச் செய்திருந்தால், அங்கு குருதி உறைந்து கட்டிபட்டு இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தும். அவ்வாறு அடைபடும் போதுதான் மாரடைப்பு, பக்கவாதம் ஆகியன ஏற்படுகின்றன. அஸ்பிரின் மருந்தானது அவ்வாறு இரத்தம் உறைந்து மாரடைப்பு, பக்கவாதம் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கின்றன.

### எவ்வளவு அஸ்பிரின் தேவை?

வழமையான அஸ்பிரின் மாத்திரைகள் 300 மிகி (300 milligrams (mg) அளவுடையவை. ஆனால் மாரடைப்பு பக்கவாதம் ஆகியவற்றைத் தடுப்பதற்கான மாத்திரைகள் 75 மிகி முதல் 100 மிகி வரையானவை மட்டுமே. இது அந்தத் தேவைக்கு போதுமானதாகும்.

### இவற்றிலும் வெவ்வேறு வகைகள் உள்ளன

இரைப்பையில் கரையாது அப்பால் சென்று உணவுக் குழாயில் கரைவதை Enteric-coated aspirin என்பார்கள். இது முக்கியமாக இரைப்பை புண் உள்ளவரக்ளுக்காகும். இரைப்பையை உறுத்தாது அப்பால் சென்று கரைய வைப்பதன் மூலம் பாதுகாப்பு அளிக்கிறது. ஆயினும் இது சமிபாடடைந்து செயற்படுவதற்கு கூடிய நேரம் எடுக்கிறது. அத்துடன் இரைப்பையை உறுத்தாது என்ற போதும் இரைப்பை புண்ணிலிருந்து இரத்தம் கசிவதைக் குறைக்குமா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. வேறு சில வாயில் வைத்துக் கரையவிடக் கூடியனவாக இருக்கின்றன. இவை விரைவில் உறிஞ்சப்பட்டு விடும்.


### சத்திர சிகிச்சைகளும், நிறுத்துவதும்

இவற்றைத் தினமும் உட்கொள்வது அவசியமாகும். தொடர்ந்து உபயோகிப்பவர்கள் இதனைத் திடீரென நிறுத்துவது கூடாது. திடீரென நிறுத்தினால் அது எதிர் விளைவை ஏற்படுத்தி,

28 ஆம் பக்கம் பார்க்க...



டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

வெற்றிமணி திருமண சேவை



மணமகள் தேவை

யேர்மனியில் Master படித்து முகாமையாளராக பணிபுரியும் நற்குணமுள்ள 29 வயது நிரம்பிய சைவ வேளாளர் குல எமது மகனுக்கு ஏற்ற நற்குணமுள்ள பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்:
+4915787447156

மங்கல இசைக்குழு

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன் நாதஸ்வர இன்னிசைச் செல்வன்



N.K.Raguraman
Dresdener Str.6 50126 Bergheim Germany
Tel: 0049 157 89 15 95 71



0049 2271 670236 | 0049 160 91146240

# யேர்மனி டோட்முண்ட் தமிழர் அரங்கத்தில் சிறப்பான பொங்கல் விழா





பொங்கல் நாள் அன்று (15.01.2024) டோட்முண்ட் தமிழர் அரங்கத்தில் பொங்கல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மத சார்பற்ற முறையில் தமிழர் திருநாளாக இப் பொங்கல் விழா 2015 ஆம் ஆண்டில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழர் அரங்கத் தின் கலை வகுப்பு மாணவ மாணவிகளின் நடனங்கள் சிறப்பானதாக அமைந்தன.

பொங்கல் விழா பற்றியும் விரைவில் டோட்முண்ட் நகரில் அமையவிருக்கும் திருவள்ளுவர் சிலை பற்றியும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

---

# எசன் தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றத்தின் தைப்பொங்கல் நிகழ்வு



எசன் தமிழ்மொழிச்சேவை கலாசார மன்றத்தில் நடைபெற்ற தைப்பொங்கல். இந்நிகழ்வில் எசன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர். 15.01.2024


டோட்முண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாயம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்




# பாதி நிறைந்த என் கண்ணாடிக் குவளை


## (My glass is half full)

என்னது, எப்பவும் அரைவாசித் தண்ணியோ? நீங்கள் கேட்பது புரிகிறது. பயப்பட வேண்டாம், நான் கூற வரும் விடயம் வேறு.

நான் இங்கு பிரித்தானியாவில் அரச பாடசாலைகளில் தொடர்ச்சியாகப் பல வருடங்களாக வகுப்பாசிரியையாக பணி புரிந்து வந்ததில், பணி சார்ந்த பல நன்மைகள் வளர்ந்திருந்தாலும், என் தனிப்பட்ட முன்னேற்றங்களில் ஒன்றாக விளங்குவது என் திடமான நேர்மறைச் சிந்தனையைப் பெற்றுக் கொண்டது தான். தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், பணி சார்ந்த காலத்திலும் என பல்வேறு சவால்கள், சஞ்சலங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்ட போது என்னைக் காப்பாற்றி, நெறிப்படுத்தியது இந்நேர்மரைச் சிந்தனை தான்.

நேர்மறைச் சிந்தனை என்றால் என்ன என்று பார்த்தோமேயானால் அது மிக இலகுவாகக் கையாளக்கூடிய சிந்தனை முறைமை தான். “My glass is half full.“ என ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதாவது, உங்கள் கண்ணாடிக் குவளை (glass) ஒன்றில் பாதி நீர் மட்டுமே இருக்கும் போது, உங்கள் சிந்தனையை இரு விதமாகப் பார்க்கலாம். ஒன்றில் நீங்கள் உங்களிடம் பாதிக்குவளை நீர் இருக்கிறதே என மகிழ்ச்சி அடையலாம், அல்லது என் குவளையில் பாதி ஒன்றுமில்லாமல் இருக்கிறதே என அழுது வடிக்கலாம். நாம் அழுவதால் எதுவும் நன்மை கிடைத்து விடப்போவதில்லை. சில வேளைகளில் அழுவது என்பது ஒரு வகை உணர்வின் வெளிப்பாடென்பதால் அழுவது ஒன்றும் தவறான விடயம் அல்ல என்பதையும் நாம் நினைவில் கொள்ளுவோம். பல சமயங்களில் அழுவது மனதின் இறுக்கத்தைக் குறைக்க வல்லதாய் இருக்கிறது.

இருந்தாலும், ஒரு விஷயம் தவறாகி விட்டால், அல்லது நாம் எதிர் பார்த்தது




கிடைக்காது விட்டால் வாழ்க்கை முடிந்து விட்டது என்று நாம் சிந்திக்கத் தேவையில்லை. சரி,இனி அந்த விடயத்தை அப்படியே விட்டுவிட வேண்டியது தான் என எண்ணவும் அவசியமில்லை.

இப்படிச் சிந்திக்கச் சிரமமாக இருந்தாலும் கூட வாழ்க்கையில் எல்லாவற்றையும் வெவ்வேறு கோணங்களில் பார்ப்பதற்கு, சூழ்நிலைகள் சிறந்ததாக இல்லாத போதும் இந் நேர்மறைச் சிந்தனை என்பது எம்மை வழி நடத்தும். உதாரணமாக, ‘எனக்கு வேலை கிடைக்காததால் நான் மிகவும் வருத்தப்படுகிறேன்‘ என்பதை விட ‘எனக்கு வேலை கிடைக்கவில்லை, ஆனால் இப்போது நேர்காணலில் இருந்து என்ன எதிர்பார்க்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்‘ என்று மாற்றி யோசிக்கலாம் அல்லவா? அது தானே உண்மையும்?

### நேர்மறை சிந்தனை என்றால் என்ன என்பதைச் சுருக்கமாகப் பார்க்கலாம்

நேர்மறை சிந்தனை என்பது ஒரு வித சிந்தனை அணுகுமுறையாகும், இதன் மூலம் நாம் சிறந்த சாதகமான முடிவுகளை எதிர்பார்க்க முடிகிறது.அதற்காக நாம் எமது தலையை மணலில் புதைத்து எமது பிரச்சினைகளைப் புறக்கணிக்கிறோம் என்று அர்த்தமல்ல. இது விரும்பத்தகாத சூழ்நிலைகளைச் செயல் திறன் மிக்க வழியில் அணுகுவதைக் குறிக்கிறது.

இதன் மூலம் பல நன்மைகள் விளைகின்றன என்பது ஆய்வுகளில் தெரிய வந்திருக்கிறது என்பதை விட நானும் இதைக் கண்கூடாக அனுபவித்திருக்கிறேன் என்பதும்



பூங்கோதை
(இங்கிலாந்து)

இங்கே குறிப்பிடத் தக்கது. நேர்மறையாக சிந்திப்பதும், நம்பிக்கையுடன் இருப்பதும் பல ஆரோக்கியம் சார்ந்த நன்மைகளை விளைவிக்கிறது. நோய் உள்ளவர்களுக்கு, நம்பிக்கையுடன் இருப்பது என்பது விரைவில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப உதவுகிறது. மன உளைச்சல் மற்றும் சோர்வைக் குறைக்கிறது. நேர்மறை சிந்தனையைத் தந்து உங்கள் நோய எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

நேர்மறையான சிந்தனையை எப்படி நடைமுறைப்படுத்துவது எனப் பார்க்கலாம். நீங்கள் விரும்புவதை நீங்கள் அறிந்து கொள்வதும் அது குறித்து ஒவ்வொரு நாளும் எழுதுவதும் பயனளிக்கின்றது. தியானம் போலவே வேடிக்கை நிகழ்வுகளுக்கு நேரம் ஒதுக்குவது, பாடுவது,ஆடுவது, நடப்பது, நீந்துவது, சமைப்பது என்று அது எதுவாக இருப்பினும், அது குறித்து ஒவ்வொரு நாளும் எழுதுங்கள்.

உதாரணமாக, நான் மாலையில் அல்லது இரவில் தூங்கப் போவதற்கு முன்னால் இவற்றை எழுதுவது வழக்கம். “இன்று நான் நீந்தப் போய் வந்ததில் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.“ அல்லது “ நான் இன்று என் குடும்பத்தவருடன் பூங்காவில் நடைப் பயிற்சி செய்ததில் மகிழ்ச்சியாக உணர்கிறேன்.“ என்பது போன்றவை மனத்தை மகிழ்விக்கும். அதே போல உங்கள் வார்த்தைகளும் மற்றவர்களை இயன்றவரை மகிழ்விப்பதாகவே இருக்கட்டும்.

வாழ்க்கையில் உங்கள் சாதனைகள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் கொண்டாடுங்கள். ஒவ்வொரு சூழ்நிலையிலும் முயன்றவரை நல்லதைப் பாருங்கள். நாம் எவ்வளவு தூரம் நேர்மறைச் சிந்தனைகளைக் கொண்டிருக்கிறோமோ அவ்வளவு தூரம் எமக்கான பாதைகளும் தெளிவாகத் தெரிய ஆரம்பிக்கும்.

28 ஆம் பக்கம் பார்க்க...

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de


நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery



தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425




கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

காதல் சுகத்தின் சுவை ஊறக் கவி சமைத்தவர் பாரதி. இவ்வாழ்வின் உயிராக, இவ்வையகத்தின் தலைமை இன்பமாக , மனிதத்தின் அடிப்படையாக , உணர்வுகளுக்கெல்லாம் மகுடமாக, வண்ணக்கனவுகளின் விலாசமாக, நினைக்கும் போதெல்லாம் தேனூறும் திரவியமாக, எதிர்மறை செயல்களை யெல்லாம் அழிக்கவல்ல மாமருந்தாக, மண்ணுலகில் அமரசுகம் தரும் அமிழ் தமாக காதலைக் காட்டித் தந்தவர் பாரதி.

இப்படித்தான் ஒரு வசீகரப் பொழுதில் பெட்டைக் குயிலொடு காதல் கொள்கிறார். இந்தக் காதல், பாட்டினால் மலர்கிறது. பாட்டினில் அன்பு செய் என்று இசைமீது அதீத நாட்டம் கொண்ட பாரதி, குயில் பாடிய கருத்தாழம் மிக்க பாட்டினைக் கேட்டதும் செய்வதறியாது தன்னை இழந்து நிக்கிறார்.

இன்னிசைப் பாடலினிலே
யானும் பரவசமாய்,
“மனிதவுரு நீங்கிக் குயிலுருவம்
வாராதோ?
இனிதிக் குயிற்பேட்டை
என்றும் பிரியாமல்,
காதலித்துக் கூடிக் களியுடனே
வாழோமோ?
நாதக் கனலிலே
நம்முயிரைப் போக்கோமோ?

நானும் மனித உடல் மாறி இந்த குயில் போல வடிவமெடுத்து , இந்தப் பெண்குயி லோடு கூடிக் களியுற்று என்றும் பிரியாமல் வாழும் வழி இல்லையா? இந்தக் குயி லின் இசை அக்கினியில் என் ஆவியை அர்ப்பணம் செய்ய மாட்டேனா? என்று ஏங்குகிறார்.

என் நெஞ்சத்தை தைக்கும் வகை யில் ஊடுருவிப் பார்க்கும் ஆடவரே, என் கண்வழி மனஓட்டத்தை இன்னுமா அறியவில்லை?. காதலை வேண்டிக் கரைகிறேன் இல்லையேல் சாதலை வேண்டித் தவிக்கிறேன் என்று அந்தச் சின்னக்குயிலும் துணிந்து தன் காதலை வெளிப்படுத்துகிறது.

இதனைக் கேட்ட பாரதிக்கு ஒருவித சுகமான புதுமையான ஆசைக் காச்சல் பீடித்துக் கொள்கிறது. மன வீணையில் அந்தக் குயில் பாடிய பாடல் எதிரொலித் துக் கொண்டிருக்க காதல் போதையேறிக் கிடக்கிறார்.

ஆனால் அவ்விடத்தே ஏனைய பறவைகள் வந்துவிடுகின்றன. சோதித்த திருவிழியீர் இன்று போய் நான்கு நாட்கள் சென்று மீண்டும் வருக , இந்த நான்கு தினங்களையும் பத்து யுகங்களைப் போல சிரமப்பட்டு கழிப்பேன் என்று நீண்ட

# மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ?

பெருமூச்சு மேலெழ அந்தச் சின்னக் குயில் உத்தரவிடுகிறது.

உள்ளும் புறமும் அந்தக் குயிலின் நினைவு சூழ்ந்து கொள்ள, ( பார்க்கும் இடமெல்லாம் நந்தலாலா ) மன்மதனு டைய கணைகள் பாய்ந்திருந்த இதயம்



ஒரு நாள் கழிவதற்கு கூட பட்ட பாட்டினை யாரும் பட்டு இருக்க மாட்டார்கள். நெசவு தறி கூட பெற்றிருக்காது. தாள வாத்தியம் கூட பட்டிருக்காது என்று பிரிவால் வாடும் காதலன் பாரதி புலம்புகிறார்.

இவ்வாறாக பாரதியின் குயில் பாட்டுக் கதை தொடர்கிறது. அந்த தொடர்ச்சியில் இருக்கும் கவிநயமும், காதல் சுவையும், வேதாந்தமும், தத்துவமும், வாழ்வியலும் ஒவ்வொரு முறை படிக்கும் போதும் பெரு வியப்பாகவே இருக்கும். புது புது அர்த் தங்களை கட்டவிழ்க்கும்.

ஈற்றில் பல கதை கொட்டித் தீர்த்து காதலருள்புரிவீர். காதலில்லை யென றிடிலோ சாதலருளித் தமதுகையால் கொன்றிடுவீர்!“ என பாரதியின் கையில் வீழ்கிறது அந்த மோகனக் குயில்.

மாதரன்பு கூறில் மனமிளகார் இங்குளரோ?

மூண்டு வரும் இன்ப வெறி கொண்டு மிக்க அன்புடன் தன் கையில் வீழ்ந்திருந்த சின்ன குயிலை முத்தமிட்டார்.

விண்டுரைக்க மாட்டாத விந்தையடா!
விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான்
தெய்விகமாம் காட்சியடா!
பெண்ணொருத்தி அங்குநின்றாள்
பேருவகை கொண்டுதான்
கண்ணெடுக்கா தென்னைக்
கணப்பொழுது நோக்கினாள்
ஆஹா என்ன ஆச்சரியம்! முத்தத்தினை
வாங்கிக்கொண்ட கணத்திலேயே சின்ன
குயில் பெண் உரு கொண்டு காட்சி தந்தது.
பெண்ணின் அழகை பாரதி வர்ணிக்கும்
ஒவ்வொரு சொல்லும்

எத்தனை கோடி இன்பம் .??
சாமீ! இவளழகை
எற்றே தமிழில் இசைத்திடுவேன்?
கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக்
கூறுவனோ?
மீள விழியில் மிதந்த கவிதையெலாம்
சொல்லில் அகப்படுமோ? தூயசுடர்
முத்தையொப்பாம்
பல்லில் கனியிதழில் பாய்ந்த
நிலவினையான்
என்றும் மறத்தல் இயலுமோ?
பாரின்மிசை
நின்றதொரு மின்கொடிபோல்
நேர்ந்தமணிப் பெண்ணரசின்
மேனி நலத்தினையும் வெட்டினையும்
கட்டினையும்
தேனி லினியாள் திருத்த நிலையினையும்
மற்றவர்க்குச் சொல்ல
வசமாமோ? ஓர் வார்த்தை,
கற்றவர்க்குச் சொல்வேன்.
கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண்கூத்
தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனோடே
இன்னமுதைத் தான்கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த
கட்டியினால்
மாதவனின் மேனி வகுத்தான்
பிரமனென்பேன்.

அவள் விழி கவிதையையும், நிலவெ ழில் இதழையும் , தேன் மேனியாள் திருவழகையும் சொல்லமுடியாது தவித்து , கற்றவர்க்கு மட்டும் சொல்ல முயன்று , தோற்று , பெருங்களி கொண்டு , விரும்பித் தழுவி, ஒப்பில்லா சுவை ததும்பும் இதழை முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெரு மயக்கத்தில் சித்தம் மயங்கி நின்ற உச்ச உணர்வை எட்டுகிற பொழுது கண்டது கனவென கண்விழித்தாலும்,

குயில் பாட்டினூடாக பாரதி சொல்ல வந்த வேதாந்தத்தை அறிந்துணர இன்னும் எத்தனை எத்தனை ஆயிரம் குயில்கள் கானம் இசைக்க வேண்டுமோ மனமெனும் பெருங்காட்டில் ??

வேதாந்த மாக விரித்துப்
பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற்
கூறீரோ?




SRS தமிழ் வானொலியின் ஆண்டு விழா, SRS Karaoke & DJ வழங்கும்
பாடுவோர் பாடலாம்
"பாட்டினில் அன்புசெய்"
நிகழ்வினூடாக சேகரிப்படும் நிதி முள்ளியவளையில்
இயங்கி வரும் உறவுச்சோலை
மறுவாழ்வுக் கழகம் அமைப்பிற்கு வழங்கப்படும்
ON AIR
SRS Tamil Radio
4PM TO 10 PM
SATURDAY 17TH
FEBRUARY 2024
DJ SRS Karaoke
SRS ரவிஷான்
"இசைக் கலாமணி' "கலாபூஷணம்" "சங்கீத வித்துவான்"
திரு.ஐ.சங்கரநாராயணன் ஞாபகார்த்த விருது 2023
கலைஞர்கள் கௌரவிப்பு விழா
ஈழத்து மெல்லிசைப் பாடகர் திரு.மா.சத்தியமூர்த்தி
திருமதி ஆனந்தராணி பாலேந்திரா
சங்கீத வித்துவான் திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி
வெற்றிமணி பிரதம ஆசிரியர், ஓவியர் திரு.மு.க.சு.சிவகுமாரன்
ஈழத்து எழுத்தாளர் திருமதி கலா சிறீரஞ்சன்
SRS தமிழ் வானொலியின் தொகுப்பாளர்கள்
SRS ரவிஷான்
S.T.பானு
பாபு சுரேஷ்
ம.திலக்
கு.ரமேஷ்
ச.வத்சலாதேவி
க.கௌரி
சி.தர்சினி
ர.அமுதா
நிரா சுரேஷ்
The Oxshott Village Center
19 Holtwood Road
Oxshott, Surrey,
KT22 0QJ
நுழைவுக்கட்டணம்:
ஒருவருக்கு £15
குடும்பத்திற்கு £20
(2 Adults, 2 Kids)
தொடர்புகளுக்கு:
+44 7865 663960 ரவிஷான்
+44 7940 009732 ரமேஷ்
+44 7703 193949 நிரா
+44 7549 004300 அமுதா



# ‘வெத்திலை போட்ட பத்தினிப்பொண்ணு சுத்துது முன்னாலே’

## வேத்து இலை

அம்மா செய்த மைசூர்ப்பாகை களவெடுத்து பள்ளிக்கூடம் கொண்டு போக ஒளிச்சு வைச்சதை எறும்பு காட்டிக் குடுக்க, அம்மா அடிக்கத் தடி தேடி ஆச்சீன்டை பொயிலைக் காம்பைக் கொண்டந்தா. அப்ப அடிக்கிறதுக்கு வசதியா கனக்க இருந்திச்சுது. ஏப்பைக் காம்பு, பூவரசந்தடீ, முருக்கஞ் செத்ததல், பொயிலைக்காம்பு எண்டு கன சாமாங்கள் வீட்டிலயோ வேலீலயோ ready made ஆ இருந்தது. இப்ப வீட்டை அடிக்க கடையில போய் பிரம்பை வாங்கி வைக்க பிள்ளைகள் எடுத்து உடைச்சுப் போடும்.

வழமையான கடைக்குப் போற வேலையோடை சில நேரம் வெத்திலை வாங்கிற வேலை வரும். சைக்கிள் பழகின புதுசில அதை ஓடிறதுக்காகவே சைக்கிளில போக விட்டா வாங்கித்தாறன் எண்டு deal போட்டு, ஓம் எண்டா ஓடிப் போய் வாங்கிறது. மாமா வீட்டை வந்தா வெத்திலை வாங்கு எண்டு கொஞ்சம் கூடத் தருவார் எனக்கும் ஏதும் வாங்க எண்டு. “ வெத்திலை வாங்கேக்க உமா ஸ்ரோர்ஸில வாச வெத்திலை எண்டு கேட்டு வாங்கு“ எண்டு மாமா சொன்னார், வெளிக்கிட்டு வர ஆச்சி எனக்கு வெறும் வெத்திலை எண்டு சொல்லி காசும் தந்தா. வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன்னால இருக்கிற உமா ஸ்ரோர்ஸ் எண்ட கடை இப்பவும் இருக்கு. வாழைப்பழமும் வெத்திலையும் மட்டும் தான் அப்ப விக்கிறது. வாச வெத்திலை ஒரு கூறு எண்டு கேக்க, “ஒரு வெத்திலையா மூண்டு வெத்திலையா“ எண்டு கேட்டதுக்கு பதில் சொல்ல மூண்டு வெத்திலையை பாத்து எடுத்து வாளித்தண்ணீல கழுவி உதறி மேசையில வைச்சிட்டு மேல் வெத்திலையில பாக்கை வைச்சு, ரெண்டாவதில அசோகாப் பாக்கு வைச்சி, பிறகு மூண்டாவதில மூண்டு சீவல் நாறல் பாக்கை வைச்சிட்டு கிழிச்ச பேப்பர்த் துண்டில சுண்ணாம்பை வைச்சு மடச்சு வெத்திலைக்கடீல வைச்சிட்டு,பழைய கொப்பிப்



பேப்பரில மூலைப் பக்கமாச் சுத்தி நிமித்தி சுருளின்டை அடியை ரெண்டுதரம் மேசையில தட்டீட்டு வெத்திலை நுனியோட பேப்பரையையும் சேத்து மடிச்சுத்தாற ஸ்டைலுக்காக ரெண்டு வெத்திலைக் கூறு வாங்கலாம்.

யாழ்ப்பாணத்தில அப்ப வெத்திலை போடாதவன் இல்லை எண்டு சொல்லலாம். ஒரு வெத்திலைப் பையில், பாக்கு வெட்டியும், பொக்கை வாய்க்கிழவிக்கு உரலும், இடிக்குறதுக்கு தண்டவாளத்தில சிலிப்பர் கட்டை இறுக்கிற ஆணியோ இல்லாட்டி ஒரு இரும்போ இருக்கும். வீடுகளில பத்து மணிப் பிளேன்ரீயோட ஒருக்கா, மத்தியானம் சாப்பாட்டுக்குப் பிறகு ஒருக்கா, அப்பிடியே பின்னேரம் தேத்தண்ணிக்குப் பிறகு ஒருக்கா எண்டு சாப்பாட்டுக்கு நிறை குறை நிரப்பியா வெத்திலை இருக்கும். வீடுகளில மூத்திரம் பெய்ய ஒரு மூலை மாதிரி வெத்திலை துப்பிற வேலியும் இருக்கும். வீட்டில ஆரும் வந்தாலும் தேத்தண்ணி குடிச்சிட்டு வெத்திலை போடுவினம். அதே போல வெத்திலை ஒரு அத்தியாவசிய உப உணவாக கன கூலி வேலைக்காரருக்கு இருந்திச்சுது.

எண்பதில யாழப்பாணம் town க்க “வாளிக்குள் துப்பவும்“ எண்ட போட்டோட பழைய மண்ணெண்ணை பரலை நிமித்தி வைச்சு வெள்ளைப் பெயின்ற்றும் அடிச்சு வைச்சிருந்தவை. அதோட நல்லூர் வீதியிலையும் திருவிழாக் காலத்தில துப்பிறதுக்கு வாளிகள் வைச்சிருந்தது. ஊரில ஏனோ தெரியேல்லை துப்பிற பழக்கம் பொதுவா இருந்திச்சுது. பயணங்கள் போறவை ஒண்டுக்குப் போகமால் மூத்திரத்தை அடக்கினாலும் வெத்திலை போட்ட எச்சிலை உடனயே துப்பீடுவினம். முனிசப்பல் குப்பை எடுக்க வரேக்க பரலுக்குள்ள நெருப்புத் தண்ணி ( Lysol) மாதிரி ஊத்துவாங்கள் அது துப்பலோட சேந்து வெய்யிலுக்கு காஞ்சு போடும்.

பழைய காலத்தில கசம் கனபேருக்கு இருந்ததால கண்ட இடத்திலேம் துப்பி எச்சிலில இருந்து கிருமி பரவாமத் தடுக்க அப்பிடிச் செய்தாங்களோ தெரியேல்லை. ஆனாலும் அதுக்கு வெத்திலை போடிற ஆக்களுக்கு அது வசதியா இருந்திச்சுது. வெத்திலை வெறும் விசேசத்துக்கும் கோயிலுக்கு கொண்டு போறதுக்கும் மட்டும் இல்லை அதை பரியாரிமார் மருந்துக்கும் பாவிக்கிறவை. தம்பிக்கு ஒரு நாள் சளி இழுக்க வெத்திலையை எண்ணை பூசி தணலில வாட்டி “ அது சளியை உறிஞ்சுமாம் எண்டு“ நெஞ்சில வைச்சவ ஆச்சி. குழந்தைப் பிள்ளைகளுக்கு எண்டால் தலையில வைக்கிறதாம். ஊரில நல்லது கெட்டது எல்லாத்திலேம் வெத்திலைத் தட்டு இருக்கும். தட்டில ஒரு பக்கமா வெத்திலையை அடுக்கி பாக்குச் சீவலை அள்ளிப் போட்டு பழைய றின்பால் பேணீல வாங்கின சுண்ணாம்பை அள்ளி வைச்சிட்டு, சுருட்டுக் கட்டொண்டையும் வைச்சுக் குடுப்பினம். அதோட பொயிலைக் காம்பில இருந்து இலையை வெட்டீட்டு காம்பை எடுத்து வைப்பினம், அடிக்கிறதுக்கும், மூக்கில விட்டுத் தும்மிறதுக்கும். அதோட மலச்சிக்கல் காரருக்கு மல வாசலில வைச்சா சிக்கல் இல்லாமல் போகும்.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஆய கலைகளில சேக்க மறந்ததில இந்த வெத்திலை போடிறது ஒரு கலையும் ஒண்டு. நல்லது கெட்டதில வைக்கிற வெத்திலைத் தட்டத்தை எடுத்து மடீல வைச்சபடி பழசுகள் வெத்திலை போடும். வெத்திலைத் தட்டில அடுக்கின வெத்திலைக்கு நடுவில ஆகலும் முத்தலும் இல்லாத வெளிறின பச்சையாப் பிஞ்சும் இல்லாத வெத்திலை ஒண்டை எடுத்து ரெண்டு பக்கத்தையும் கையால ( சில வேளை வேட்டியிலே) வடிவாத் துடைச்சிட்டு காம்பை முறிச்சு அப்பிடியே நடு நரம்போட இழுத்து எறிஞ்சிட்டு சுண்ணாம்பை சுண்டு விரலால எடுத்து வெத்திலையின் வெளிப்பக்கத்தில் மெதுவாகப் பூசோணும். அதோட நல்ல மெல்லிசாச் சீவின, காஞ்ச சீவலா பாத்து எடுத்து சாடையாக் கசக்கீட்டு மெல்ல ஊதி தூசை பறக்கவிட்டிட்டு அப்பிடியே ஒரு பக்கக் கொடுப்புக்குள் வைத்து மெல்லச் சப்பத் தொடங்க வாய்க்குள்ள இருக்கிற பாக்கில எச்சில் ஊறும். பிறகு வெத்திலையை மடிச்சு மற்றப் பக்க கொடுப்புக்குள்ள வைச்சிட்டு இரண்டையும் சமமான அளவில் சப்பினபடி நாக்கினால் பிரட்டிக் கலக்க வாற வெத்திலைச்சாறை சுண்டு விரலையும் நடு விரலையும் வாயில வைச்சு தெறிக்காம எட்டித் துப்போணும். காரத்துக்கும் வயளவந க்கும் தேவையான அளவுக்கு ஏத்த

17 ஆம் பக்கம் பார்க்க...







சேவியர்
(தமிழ்நாடு)

# நடுப்பக்கம்

# காதலிக்க நேரமில்லை

"டைம் இல்ல.. எதுன்னாலும் சட்டுன்னு சொல்லி முடி! " என உலகம் இப்போது பரபரப்பாய் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒன்றரை வினாடியில் ஜி-பே நீல டிக் காட்டவில்லையென்றால் கடுப்பாகிப் போகிறது உலகம். அரை மணி நேர உணவு டெலிவரி எல்லாம் ஆமை வேகமாய்த் தோன்றுகிறது, எட்டு நிமிட ஸெப்டோ டெலிவரிகளைத் தேடி உலகம் ஓடுகிறது. ஐந்து நிமிட யூடியூப் வீடியோ போரடிக்க, ஒரு நிமிட ஷார்ட்ஸ்களை நோக்கி மனம் பாய்கிறது.

ஒரு பக்கக் கதைகள் கூட நீளமாய்த் தோன்ற, நான்கு வரிக் கதைகளே இப்போது கோலோச்சுகின்றன. எல்லாம் உடனடி நடக்க வேண்டும். காத்திருப்பது டைம் வேஸ்ட் என நினைக்கிறது இன்றைய உலகம். இந்தக் காலகட்டத்தில் காதல் மட்டும் என்ன பாட்டுப் பாடி மரத்துக்குப் பின்னாலா ஒளிந்திருக்கும்? அதுவும் தனது கவச குண்டலங்களையெல்லாம் கழற்றி வைத்துவிட்டு டிஜிடல் இழைகளுக்குள் விழுந்து கிடக்கிறது.

அந்தக் காலத்துல. என இழுத்தாலே இந்த தலைமுறை கதவை இழுத்துச் சாத்திக் கொள்கிறது. உங்களோட பழைய பஞ்சாங்கங்களையெல்லாம் கேட்க நேரமில்லப்பா என இன்ஸ்டா ஸ்டோரிக்குள் நுழைந்து விடுகிறது. ஆனால் திரும்பிப் பார்ப்பதின் சுகம் அலாதியானது அல்லவா?

பள்ளிக்கூட வழி நெடுகிலும் கள்ளி முள்ளில் பெயரெழுதி காதலின் கல்வெட்டாய் அதைப் பாவித்து நடந்த காலங்கள் அழகியலின் உச்சம் அல்லவா? எழுதி வைத்த காதல் கடிதத்தை ஆயிரம் முறை வெளியே எடுத்தும் காதலியிடம் கொடுக்காமலேயே விடைபெற்ற காதல்கள் நாம் அறியாததா? ஒற்றைப் புன்னகை போதுமென அந்த அழகின் வெப்பத்தில் ஆயிரம் நாட்களைக் கடத்திவிட்ட காலம்வியப்பல்லவா ?

இன்லெண்ட் லெட்டரின் இடைவெளிகளிலும் கூட காதலின் எழுத்துகளை எழுதி அனுப்பி, துடிக்கும் இதயத்தோடு காத்திருந்து ஓரப் பார்வையை மட்டுமே பதிலாய்ப் பெற்ற காலங்கள் இலக்கியச் சிறப்பல்லவா ? தோப்புகளின் இடையிலும், சன்னல்களில் மறைவிலும், பேருந்துகளின் பரபரப்பிலும் எப்படியெல்லாம் காதல் தனது பார்வைப் பரிமாற்றங்களில் வளர்ந்திருக்கிறது.

எத்தனையோ காதல்கள் ஒரு வார்த்தை கூட பேசாமலேயே முடிந்து போயிருக்கின்றன. எத்தனையோ காதல்கள் ஒரு புன்னகையிலேயே உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. எத்தனையோ காதல்கள் பெற்றோரின் மீதான அச்சத்தால் உடைந்து போயிருக்கின்றன. எத்தனையோ காதல்கள் காதலாகவே உறைந்து போயிருக்கின்றன.

## புளூ டிக் வந்தபின்னும் பதில் வரவில்லையேல் காதலை முறித்துக் கொண்டு விடுகிறார்கள்

காதலைப் பற்றி காலங்கள் தோறும் எழுதிக் கொண்டே இருக்கலாம். காரணம் மானுடம் உள்ளவரை காதல் இருக்கும். காதல் உள்ளவரை இதயங்கள் உயிர்க்கும்.



நதிக்கரை நாணல் போல அன்றைய காதலை ஆர அமர ரசித்தவர்களுக்கு இன்றைய காதலைப் பார்ப்பது வியப்பாகவும் இருக்கும், சில வேளைகளில் குழப்பமாகவும் இருக்கும்.

இன்றைக்கு காதல் வாட்சப்பில் தொடங்கி வளர்கிறது. ஒன்றே ஒன்று எனும் காதல் மாறி, ஏதோ ஒன்று எனும் ஆன்லைன் தேடலாக காதல் மாறிவிட்டது. தனது காதல் புனிதக் காதல் என்பவர்கள் கூட எதிர் முனை பிஸியாக இருந்தால் சந்தேகப்படுகிறார்கள். புளூ டிக் வந்தபின்னும் பதில் வரவில்லையேல் காதலை முறித்துக் கொண்டு விடுகிறார்கள்.

சமூக வலைத்தளங்களே இன்றைய காதல் ஊடகங்கள். இன்றைய நகர வாசிகளுக்கு புழுதிகளின் இடையில் காதல் பகிர்வதை விட படுக்கையில் புரண்டு கொண்டே சமூக ஊடகங்கள் வழியாக பேசிக் கொள்வது எளிதாக இருக்கிறது. அவர்கள் ஒரு வெட்கத்தின் அழகை காண்பதில்லை. ஒரு சிணுங்கலில் ஓசையைக் கேட்பதில்லை. அவர்களுடைய உணர்வுகளை ஸ்மைலிகளே சுமந்து செல்கின்றன. அவர்களுடைய காதல் கவிதைகளை சேட்-ஜிபிடி களே எழுதுகின்றன. அவர்களுடைய காதல் டிஜிடல் நதியில் பயணிக்கின்ற பாய்மரக் கப்பலாய் இருக்கிறது.

சர்வத்தையும் ஒப்படைக்கும் காதல் இன்றைக்கு இல்லை. கடையில் ஒரு பொருளை வாங்குவது போலவோ, சோதனை முயற்சியாக ஒரு பிஸினஸ் ஆரம்பிப்பது போலவோ தான் காதலும் துவக்கப் புள்ளியை வைக்கிறது. பழகிப் பார்ப்போம் பிடித்தால் இணைவோம், பிடிக்கவில்லையேல் இன்னொருவருடன் பழகிப் பார்ப்போம் என்று காதல் புதிய இலக்கணம் எழுதுகிறது. இங்கே காதலின் மெல்லிய சத்தத்தை விட, காமத்தின் வல்லின முத்தமே அடிநாதமாய் இருக்கிறது.

'ஏம்பா சின்ன வயசுலயே கல்யாணம் பண்ணி வைக்கிறே' என்ற கேள்வி பண்டைய காலத்தில் சகஜம். இருபது வயதுகளின் தொடக்கத்திலேயே பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது வழக்கமாய் இருந்தது. அதற்கும்

17 ஆம் பக்கம் பார்க்க...

Advent Travels
உங்கள் விமானப் பயணங்களை இலகுவாக்க நாடுங்கள்
இலங்கை இந்திய மற்றும் உலக நாடுகளுக்கான டிக்கெட்டுக்களை நம்பிக்கைத் தரமாகவும் மலிவாகவும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Advent travels
Advent travels
Kölner Straße – 06,
57290 Neunkirchen
Tel:01573 1433373/ 02735 6571966
Email ID:- advent_travels@yahoo.com

# காதலிக்க நேரமில்லை



முந்தைய காலத்தில் அது பதிமூன்று வயது முதல் பதினெட்டு வயதாய் இருந்தது. இன்றைக்கு அதெல்லாம் இல்லை. 'ஏம்பா இன்னுமா கல்யாணம் பண்ணிக்கல ?' எனும் குரல் தான் எழுகிறது.

திருமணம் செய்து கொள்ள வேண்டும், அதன் பின் வாழ்க்கையை ஒரு புதிய கோணத்தில் அணுக வேண்டும் எனும் சிந்தனை இன்றைக்கு நீர்த்துப் போய்விட்டது. தனித்தனி நபருடைய விருப்பங்கள் மேலோங்கிவிட்டன. நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். நான் சம்பாதிக்க வேண்டும். என்னுடைய ஆசைகளை நிறைவேற்ற வேண்டும். எனக்கென ஒரு அரசாங்கம் அமைத்துக் கொள்ள வேண்டும் என எல்லோருமே விரும்புகிறார்கள். தனித்தனி விருப்பங்கள் வலிமையாகும் போது, குடும்ப விருப்பங்கள் வலுவிழந்து விடுகின்றன. விட்டுக் கொடுத்தல் என்பது தோல்வி என கருதப்படுகிறது.

சமூகத்தில் எழுந்துள்ள சமத்துவ சிந்தனையும், மாற்றங்களும் ஒருவகையில் அதன் காரணிகள் தான். ஆனால் அவை எதிர்மறையாய் குடும்ப வாழ்க்கையையும் காதலையும் சிதைக்கின்றன. குடும்பம் எனும் கூட்டு உறவில் எழுகின்ற மகிழ்வு அலாதியானது. விட்டுக் கொடுத்தலில் வருகின்ற உறவுப் பிணைப்பு உன்னதமானது. பொறுமையிலும், சகிப்புத் தன்மையிலும் வருகின்ற நிம்மதி சிலிர்ப்பானது. அடுத்தவரை வெற்றி பெற வைக்க வேண்டுமென ஒதுங்கிக் கொள்வது உன்னதமானது. அவையெல்லாம் இன்றைய தலைமுறைக்கு எட்டிக்காயாய்க் கசக்கின்றன. பண்டைய காலத்தில் திருமணம் என்பது ஒரு குடும்பமும், ஒரு ஊரும் சேர்ந்து நடத்தி வைக்கின்ற நிகழ்வாக இருந்தது. அது இன்றைக்கு இருவருக்கு மட்டுமே பிடித்துப் போனால் போதும் என்கின்ற ஒரு சிறிய நிகழ்வாகச் சுருங்கிவிட்டது. அதனால் தான் நீண்டகால பந்தங்கள் அருகிக் கொண்டே வருகின்றன. குறுகிய உறவுகள் பெருகிக் கொண்டே வருகின்றன. விழுதுகள் இல்லாத ஆலமரமாய் வாழ்க்கை பிடிமானம் இல்லாமல் புரண்டு கொண்டே இருக்கிறது. பார்க்காமலேயே காதல், பேசாமலேயே காதல், தொடாமலேயே காதல் போன்ற அன்றைய திரைப்படங்களெல்லாம் இன்றைய மக்களுக்கு நகைச்சுவையாக இருக்கும். அன்றைக்கு காதலின் கடைசி நிலையாக எது இருந்ததோ அதுவே இன்றைக்கு தொடக்கப் புள்ளியாய் இருக்கிறது. ஒரு கைகுலுக்கலைப் போல வெகு சாதாரணமாக ஒரு உடல் பகிர்வும் நடக்கிறது.

நான் ஒரு சுதந்திரப் பறவை ! ஏன் நான் இதெல்லாம் பண்ணக் கூடாதா ? எனும் அசட்டுச் சுதந்திரக் கேள்விகள் பல குடும்ப உறவுகளை பதம்பார்க்கின்றன. விவாகரத்து என்பது அதிர்ச்சியாய் அலசப்பட்ட காலங்கள் போய்விட்டன. இப்போது நீண்டகால பந்தங்களே வியப்பாய்ப் பார்க்கப்படுகின்றன. காரணம் காதல் தனது ஆழத்தை இழந்து கொண்டிருக்கிறது.

முன்பெல்லாம் திருமணம் என்றால் ஆயிரம் பேர் பின்புலத்தை விசாரிப்பார்கள். அங்கும் இங்கும் உறவுகளிடம் பேச்சுக் கொடுத்து தகவல்களைச் சரிபார்ப்பார்கள். குடும்பம் எப்படி என பார்ப்பார்கள். பையனோட குணாதிசயம் என்ன ? பொண்ணோட விருப்பங்கள் என்ன என்றெல்லாம் அலசுவார்கள். ஆனால் இப்போது அப்படியெல்லாம் நிகழ்வதில்லை. சமூக வலைத்தளங்களில் வருகின்ற அழகேற்றப்பட்ட புகைப்படங்கள் வசீகரிக்கின்றன. பகிரப்படும் காதல் செய்திகள் புளகாங்கிதம் அடையச் செய்கின்றன. யதார்த்தம் ஒரு நாள் பல்லிளிக்கும் போது, காலில் ஒட்டிய தூசை உதறுவது போல திருமணத்தையே இளசுகள் உதறிச் செல்கின்றன.



காதலிக்க நேரமிருக்கா ? உங்களுக்காகவே இருக்கிறது இந்த ஆப்! என அழைப்புகள் தினம் தோறும் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த டேட்டிங் ஆப்களில் விழுந்து காதல் என்றால் என்ன என்பதையே தலைகீழாய்ப் புரிந்து கொள்கிறது இளைய தலைமுறை.

காதல் காண முடியாத ஒரு பரவச உணர்வு. காதலை உணராதவர்கள் உண்மையான வாழ்க்கையை உணராதவர்கள். அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு பாகம் இருளடைந்தே கிடக்கும். அதே நேரம் உண்மையான காதலை இளைஞர்கள் உணரவேண்டும். காதல், விட்டுக் கொடுத்தால் கெட்டுப் போவதில்லை. விட்டுக் கொடுத்தலில் கிடைக்கும் இன்பத்தை சுவைத்துப் பாருங்கள். அடுத்தவரின் வெற்றி உங்களை சிலிர்க்க வைக்கும். காதல், உரையாடல்களில் வளரும். உள்ளங்களைத் திறந்து உரையாடுங்கள். விருப்பு வெறுப்புகளை முழுமையாய்ப் பகிர்ந்து கொள்ளுங்கள். எங்கே உரையாடல் வலுவாய் இருக்கிறதோ, அங்கே காதல் வலுவாய் இருக்கும்.

காதல்,அது தற்காலிக சுகங்களுக்கான கூடாரமல்ல. அது நீண்டகால பந்தத்தின் உறைவிடம். எனவே தற்காலிக சுகங்களில் தலைவைக்காமல் நிரந்தர உறவுக்கு உரமிடுங்கள்.

காதல், தனிமனித சுதந்திரங்களைப் பறிப்பதல்ல. அதே நேரம் தனித்தனியே வாழ்கின்ற தாமரை இலை, தண்ணீர் பந்தமும் அல்ல. அது ஒற்றைப் பறவையின் இரட்டைச் சிறகுகள் போன்றது ! தனித்தனியே இணைந்திருங்கள்.

காதல், பொழுதுபோக்கல்ல ! பொழுதுகளை ஆக்க வேண்டியது. எனவே உண்மையான அன்பையே பகிருங்கள். காதல் எனும் பெயர் சொல்லி உணர்வுகளைக் காயப்படுத்தாதீர்கள்

காதலியுங்கள் ! காதலின்றி அமையாது உலகு !

---

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## 'வேத்திலை போட்ட பத்தினிப்போன்னு....

மாதிரி விரலில் இருக்கும் சுண்ணாம்பை நுனி நாக்கில் இடைக்கிடை தடவிக் கொள்ளலாம். அப்பப்ப சின்னத்துண்டா வெட்டியிருக்கிற பொயிலையை எடுத்து விரித்துப் பாத்து நல்லா மணக்கிற பொயிலைத் துண்டை எடுத்து வெறுமையாக இருக்கும் கொடுப்புப் பகுதிக்குள் தள்ளி அடக்கி வைத்திருக்க வேண்டும். எச்சில் ஊறிய பொயிலைச்சாற்றை வெத்திலையுடன் கலந்து அசைபோட்டுக் கொண்டு இருக்கேக்க வாற எச்சில் கடைவாயின் பக்கம் வழிய முதல் எச்சிலைத் துப்பிப் போடோணும். போட்ட வெத்திலையை ஒரு நாளும் அப்பிடியே விழுங்கக்கூடாது, அசை போட்டு சாறை உறிஞ்சீட்டு எழும்பிப் போய் வேலிப்பக்கம் எல்லாத்தையும் துப்பிப் போட்டு, விரலில மிஞ்சிஇருக்கிற சுண்ணாம்பை மரத்திலயோ சிவத்திலயோ பூசீட்டை வாயைக் கொப்பிளிச்சிட்டு வரோணும்.(பி.கு. இதனால் ஏற்படும் பக்க விளைவுகளுக்கு கம்பனி பொறுப்பேற்காது.) இப்ப ஏன் எண்டு தெரியாம வாங்கி வைக்கிற வெத்திலையை போடிறதுக்கு



ஆக்களும் இல்லாமல், அதை போடிறதை ரசிக்கிற ஆக்களும் இல்லாமல் வெத்திலை இப்ப எல்லாம் பெயருக்கு ஏத்த மாதிரி வெத்து இலையாகவே இருக்கு.

'வெத்திலை போட்ட பத்தினிப்பெண்ணு சுத்துது முன்னாலே' ஆனால் இன்றும் அந்தப் பழையபாடல் காத்துவாக்கில கேட்கத்தான் செய்கிறது.படங்களுக்கு பெயர் கூட நிச்சய தாம்பூலம். இப்ப அவையாவும் அரும்பொருள் காட்சியகப் பொருள்கள் ஆச்சு.




தனசேகரன் பிரபாகரன்
(தமிழ்நாடு)



# மடக்கிளியை கைகூப்பி வணங்கினாளே!

ஓவென்று மழை சோவென்ற சத்தத்துடன் பெய்துகொண்டிருந்தது. அவள் கண்வழியே அடை மழையிலும் விற்க வந்த பலகாரங்களை துணிபோட்டு மூடி மெல்லே நகர்ந்து செல்லும் வியாபாரி. அவ்வப்போது வந்து வந்து இவள் இருக்கிறாளா என்று பார்த்தபடி செல்லும் வாகனங்களின் மின்விளக்குகள்,அவ்வளவுதான். வீட்டில் யாரும் இருப்பது போல தெரியவில்லை, ஆங்காங்கே ஒட்டடைகள் சுவரில் சில புகைப்படங்கள். சில வாரங்களாக கயல்விழி அவளாக இல்லை, உடல் மெலிந்திருந்தது, அலுவலக வேளையில் கூட தொய்வு. காரணம் அவளுடைய வீட்டாருக்கும் இவளுக்கும் சில சண்டைகள், கணவனுக்கும் இவளுக்கும் பிணக்கு.

சில காலங்களுக்கு முன்பு வாழ்க்கை தெளிந்தநீரோடையாய் இருந்தது, இப்போது காட்டாற்று வெள்ளம் போல அடுத்து என்ன நடக்கும் என்றே தெரியாதது போல ஓடிக்கொண்டிருக்கிறது. பிணக்கு காரணம் கணவன் வீட்டில் இல்லை, வழமையாக வீட்டிலிருந்து வரும் தொலைபேசி அழைப்பும் அன்று காணவில்லை, தனிமை அவளின் மூளை அரித்துக் கொண்டிருந்தது. இனி நாம் வாழ்ந்து என்ன பயன் என்ற முடிவுக்கே அவளைத் தள்ளிக் கொண்டிருந்தது.

அவளின் கண்கள் ஒருபுறம் மின் விசிறியையும் மற்றொரு புறம் உப்பரிகையையும் நோட்டமிட்டுக் கொண்டிருந்தன, உப்பரிகையில் இருந்து ஒரு அடி கீழே வைத்து குதித்தால் போதும் எல்லாம் முடிந்துவிடும். இனி கயல்விழியை யாரும் தேடமாட்டார்கள் துன்பக்கடலில் துவண்டு நித்தம் நித்தம் வாடுவதை விட இப்படி சாட்டம் இட்டால் போதுமே என்று நினைத்தாள். மனதை கல்லாக்கிக் கொண்டு மெல்ல கைகளை உப்பரிகையின் பிடியில் வைத்து ஒரு உந்து கொடுக்க எத்தனித்தாள், இனி எல்லாம் முடிந்துவிடும் என்று கண்களை மூடிக் கொண்டாள்.

அந்நேரம் ”அகர அகர அகர....” என்று கூறிய வாளால் வெட்டுவது போல சத்தம் வந்து இவளது காதுகளைத் தொட்டது, கண்களில் நீர் வடிந்தபடி கைகளை எடுத்துவிட்டாள். நேரே உள்ளே சத்தம் வரம் திக்கை நோக்கி ஓடினாள் கயல்விழி, சத்தமிட்டது வேறு யாருமல்ல அவள் ஆசையாய் வளர்த்த செல்லக்கிளி பெயர் ”திருமங்கை”. இவளைக் கண்டதும் மிகவும் உற்சாகத்துடன் மீண்டும் “அகர அகர” என்று மிழற்றத் தொடங்கினாள் திருமங்கை எனும் இளங்கிளி.

கயல்விழி சிறுவயதிலிருந்தே மிகவும் கஷ்டப்பட்டு படித்து முன்னேறி வந்தவள், பலருக்கு உதவும் மனப்பான்மை கொண்டவள். இரக்க குணம் மிகுந்தவன், படித்து முடித்ததும் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்த்துக்கொண்டே மாலை வேலைகளிலும் வார இறுதிகளிலும் அருகில் இருக்கும் சிற்றூர்களுக்குச் சென்று ஏழைக் குழந்தைகளுக்கு ஆசிரியையாக இருந்து கல்வி கற்றுக்கொடுக்கும் பணியை செய்துகொண்டிருந்தாள். அப்போது ஒரு ஏழைச் சிறுமி இவளால் படிப்பில் சித்தியடைந்து அதற்கு பரிசாக அவளிடமிருந்த கிளியை இவளுக்குக் கொடுத்திருந்தாள். இவளும் அந்த கிளியை வீட்டிற்கு கொண்டுவந்து பாலும் பழமும் போஷித்து, திருக்குறளில் முதல் குறளான ”அகர முதல...” என்று நேரம் இருக்கும்போதெல்லாம் சொல்லிக்கொடுப்பாள், கிளிப்பிள்ளையும் முதல் எழுத்தை மட்டும் கற்றுக்கொண்டது, அதைத்தான் இப்போது சரியான நேரத்தில் மிழற்றி இவளின் எண்ண ஓட்டத்தை மாற்றியது.

ஒரு முறை கிளியைப் பார்த்தாள், அதன் பின்னால் இவளது புத்தகங்களும் குழந்தைகளுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படமும் இருந்தன, அதில் திருநெடுந்தாண்டகம் எனும் புத்தகம் மட்டும் சற்றே சாய்ந்திருந்தது, அதுவும் இவளது கண்ணில் பட்டது. அவள் திருநெடுந்தாண்டகம் படித்தவள், திவ்யப்ரபந்தத்தில் கடைசியாக எழுதப்பட்டது அந்தக் கவிதை.

அதில் காதலனைப் பிரிந்த காதலி ஒரு முறை துயரத்தால் வாடும் போது, முன்பு அவள் வளர்த்த கிளி காதலனின் பெயரைச் சொல்லி அவனது நினைவை ஊட்டி அவளை ஆசுவாசம் படுத்தும் பாடல் உண்டு. அது அவளின் நினைவுக்கு வந்தது, ஓடிச் சென்று அந்த புத்தகத்தை எடுத்தாள், இயற்கை தனக்கே கொடுத்த செய்தி என நினைத்துக் கொண்டாள், வாழ்க்கையில் தன்னால் பயன் பெற பல்லாயிரம் குழந்தைகள் இருக்கும்போது வீணே ஏன் இப்படி ஒரு முடிவெடுத்தோம் என்று நினைத்தாள்.

வாழும் வாழ்க்கைக்கு அர்த்தம் வேண்டும், பலருக்கும் பயனுள்ளவளாய் வாழவேண்டும் என்று புது உத்வேகம் கொண்டாள். இவள் படித்த இலக்கியங்கள் இவள் எடுத்த கோழை முடிவை கேலிபேசி சிரிப்பதாக நினைத்தாள். தனது கிளியை நோக்கி கண்ணீர்மல்க இரு கைகளையும் கூப்பி வணங்கினாள், கையிலிருந்த புத்தகம் கீழே விழுந்தது, அதன் பக்கங்கள் காற்றில் அசைந்து ”வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக! என்று மடக் கிளியைக் கைகூப்பி வணங்கினாளே” என்ற பாடலைக் காட்டிக்கொண்டு நின்றது.

AKSHAYAM Event Catering

AKSHAYAM

உங்கள் மங்கலகரமான வைபவங்கள் எதுவாக இருந்தாலும் நாம் உங்களுக்கு தரமான உணவுகளை அறுசுவை குன்றாது தரக்காத்திருக்கின்றோம்.

பிறந்தநாள் கொண்டாட்டம், திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா, கலைவிழாக்கள்

எதுவானாலும் சுவையான உணவுக்கு எம்மை அழையுங்கள்.

+49 157 54668021 | Akshayam Event Catering |
WhatsApp +49 157 54668021 | Bochum.Germany






# வானத்திலிருந்து பெய்யும் அதிசய வைர மழை

ஒரு நாள் நீங்கள் வெளியே நடந்து செல்லும் போது திடீரென்று பார்த்தால் மேகம் கருத்து மழை பெய்யப் போவதற்கான அறிகுறிகளை உணர்கின்றீர்கள். அவ்வாறே மழை பெய்யத் தொடங்குகிறது. ஆனால் நீங்கள் எதிர்பார்ப்பது போல் தண்ணீர் உங்கள் உடலில் வந்து விழாமல் வைரக்கற்கள் உங்கள் மேல் வந்து விழுந்தால் எப்படி இருக்கும்? இது ஒன்றும் அறிவியல் புனைவு திரைப் படத்தில் வரும் காட்சி கிடையாது, மாறாக யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகிய இரு கிரகங்களிலும் நிகழும் ஒரு உண்மையான நிகழ்வாகும். சமீப கால அறிவியல் கண்டுபிடிப்புகள் இந்த பிரகாசமான உண்மையை வெளிக் கொண்டுவந்துள்ளது.

ஹாம்பர்க் அருகே உள்ள ஷெனெ/பெல்ட் ஆகிய இடத்தில் உள்ள ஆய்வகமான ஐரோப்பிய XFELஇல் காணக் கூடிய எக்ஸ்-ரே லேசர் உடன் விஞ்ஞானிகள் ஒரு முக்கியமான கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர். கவனமான பரிசோதனைகள் மூலம், அவர்கள் யுரேனஸ் மற்றும் நெப்டியூனில் வைரங்கள் உருவாகி மழையாக விழுவதற்கு ஏற்ற நிலைமைகள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த வெளிப்பாடு விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்ல, நமது சூரிய மண்டலத்தின் வெளிப்புற பகுதிகளைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

யுரேனஸ் மற்றும் நெப்டியூனின் வாயுமண்டலங்கள் கார்பன் மற்றும் ஹைட்ரஜன் மூலக்கூறுகளால் அமைக்கப்பட்ட மீத்தேன் எனப்படும் வாயு நிறைந்த மண்டலங்களாகும். இந்த கிரகங்களின் உள்ள வளிமண்டல அழுத்தம் மற்றும் வெப்பநிலை மிகவும் அதிகமாக உள்ளது. இவ்வாரான தீவிர நிலைமைகளில், அங்கே காணப்படும் மீத்தேன் உடைந்து, அதனுள் காணப்படும் கார்பன் அணுக்கள் வைரமாக மாறுகின்றன. இவை பின் வைரக்கற்களாகத் தரையை நோக்கி மழை போன்று பெய்யும்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

முன்னர், விஞ்ஞானிகள் நினைத்தனர் கிரகங்களின் மேல் மண்டலங்களில் மட்டுமே இந்த வைரங்கள் உருவாகும் என்று. ஆனால், இந்த புதுப் பரிசோதனைகள் இந்த ஒளிரும் நிகழ்வு முன்னர் எதிர்பார்த்ததை விடக் குறைந்த ஆழத்தில் நிகழ்கிறது என்பதைக் காட்டுகின்றன. இதனால் விஞ்ஞானிகளுக்குக் கிரகங்களைப் பற்றிய புரிதல் அதிகரித்திருக்கிறது.

யுரேனஸ் மற்றும் நெப்டியூனில் பெய்யும் வைர மழை இயற்கையின் அற்புத காட்சி மட்டுமல்ல் இது ஆழமான விளைவுகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு மழையாகப் பெய்யும் வைரங்கள் அந்த கிரகங்களின் காந்தப் புலத்தை (magnetic field) வடிவமைக்க முக்கிய பங்கு வகிக்கலாம். இந்தக் கண்டுபிடிப்பு யூரனஸ் மற்றும் நெப்டியூன் பற்றியது மட்டுமல்ல. இது நமது சூரிய மண்டலத்தைத் தாண்டி காணப்படும் எக்ஸோபிளானட்ஸ், குறிப்பாக "மினி-நெப்டியூன்ஸ்" எனப்படும் கிரகங்களின் வானிலையைப் பற்றி அறிய உதவும் ஒரு விதமான அறிவியல் ஜன்னலாகும்.

இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், நீங்கள் நினைப்பது போல் பெரிய வைரக்கற்கள் வந்து விழுவதில்லை அவை மிகவும் சிறிய கற்கள் ஆகும், குறிப்பாக ஓர் சில மைக்ரோ மீட்டர்கள் அகலமுள்ளவை ஆகும்.

இவ்வாறு யூரனஸ் மற்றும் நெப்டியூனில் நிகழும் வைர மழை இந்த பிரபஞ்சத்தின் அதிசயங்களை உணர வைக்கும் ஒரு நிகழ்வாகவே பார்க்கவேண்டும். நாம் விண்வெளியை ஆராயும் போது, இன்னும் என்ன பிரகாசமான ரகசியங்களை நாம் கண்டுபிடிக்கலாம் என்பதை யார் அறிவார்? இந்த கண்டுபிடிப்பு மனித ஆர்வம் மற்றும் விஞ்ஞான முயற்சிக்கு ஒரு சான்றாகும் இது நமது பூமிக்கு அப்பால் உள்ள விசித்திரமான மற்றும் அதிசயமான நிகழ்வுகளை நமக்குக் காட்டுகிறது.

# இலங்கைத் தமிழர்களுக்கு கவிப்பேரரசு தனது நூல்களை அன்பளிப்பாக ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வழங்கினார்

இலங்கை கிழக்கு மாகாணத்தில் உள்ள கோட்டைக்கல்லாறு என்கிற ஊரில் இயங்கும் நூலகத்துக்கு கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தான் எழுதிய ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

கவிப்பேரரசை அவர்தம் இல்லத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ செந்தில் தொண்டமான் அவர்களுடன் சென்று சந்தித்த வேளை எமது கோட்டைக்கல்லாறு நூலகத்துக்கான புத்தகங்களின் தேவையைக் கவிப்பேரரசுக்கு எடுத்துக் கூறினேன்.

அதனைக் கேட்டுக்கொண்டவர் அவர் எழுதிய நூல்களின் தொகுதி ஒன்றை எங்களிடம் ஒப்படைத்தார். ஆளுநர் இந்த நூல்களை இலங்கை/கிழக்கு மாகாணத்துக்கு எடுத்துச் சென்றார்.

இறுதியாகக் கடந்த முதலாம் திகதி வெளியிடப்பட்ட மகாகவிதை உட்படக் கவிப்பேரரசு 39 நூல்களைப் படைத்துள்ளார்.

**கவிப்பேரரசின் தமிழுக்கு நன்றிகள்.**

**-கல்லாறு சதீஷ்-**




## வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உள்ள சைவ, வேளாளர் 29 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற பட்டதாரி மணமகன் தேவை. தற்போதைய பாடசாலையிலேயே தொழிலைத் தொடரக் கூடிய தூரத்தில் வரனை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்: 4915774318528





Wirtschaftsingenieur
பிறாங்பேட்டில் வேலை செய்யும் நற்குணமுள்ள 34 வயதுடைய சைவ வேளாளர் குல பெண்ணுக்கு தற்போதய இடத்தில் வேலையை தொடரக்கூடிய பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கிறோம்.

தொடர்புகளுக்கு பெற்றோர்: 4915774318528




காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14



# புதிய வெளியீடுகளும், நூலாசிரியர்களின் எதிர்பார்ப்புகளும்!

**அழகாகக் கதைக்கிறாங்கள்.. புத்தகத்தை எடுத்து நீட்டினால்...**

நீண்ட நாட்களுக்குப்பின் எனது நண்பனைச் சந்தித்தேன். அவன் இளமைக்காலத்திலிருந்து என்னோடு ஒன்றாக வாழ்ந்தவன். புலம்பெயர்ந்து யேர்மனிக்கு வந்தபோது எங்கள் சந்திப்பு மிகக்குறைவாகவே இருந்தது.ஆனாலும் ரெலிபோன் தொடர்புகள் அதிகம் உண்டு. கொரணா தொற்று வந்த காலம்,எங்களுக்கு அதிக இடைவெளியைத் தந்திருந்தது. பலரின் பிரிவுகள் இவ்வாறே நிகழ்ந்திருந்தன.சிலரின் பிரிவுகள் நிரந்தரமாகியது. இவை இப்போதும் வருத்தத்தைத் தருகிறது. நல்லாப் பழகியவர்கள் பலர் இதில் சேருகிறார்கள்.

நண்பன் சிறந்த எழுத்தாளன் பத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியிருக்கிறான்.அண்மையில் யேர்மனி டோட்முன்ட் நகரில் நடந்த புத்தகவிழாவிற்கு வந்திருந்தான். இந்தப் புத்தகவிழாவிற்கு வருவதாக முன்கூட்டியே ரெலிபோனில் சொல்லியும் இருந்தான். எனக்கும் அது மகிழ்ச்சியான செய்தியாக இருந்தது.தனது புத்தகங்களையும் கொண்டு வந்து வைக்கப்போவதாகச் சொன்னான்.எழுத்தாளர்கள் தாம் எழுதியவற்றை வாசகர் மத்தியில் சேர்ப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம் என்றான். சந்தித்தபோது இருவரும் ஆரத்தழுவி அன்பைப் பகிர்ந்து கொண்டோம்.அவனுக்கு அப்போது கண்கள் பனித்திருந்ததைக் கண்டேன். நீண்ட நாள் சந்திக்காததும் ஒரு காரணமாக இருக்கலாம். நான் அங்குபோய்ச்சேர சற்று தாமதமாகியது. என்ன மச்சான் உன்னுடைய புத்தகங்களை யாராவது வாங்கினார்களா என்று கேட்டேன்.

அதையேன் பறைவான்.அழகாகக் கதைக்கிறாங்கள். புத்தகத்தை எடுத்து நீட்டினால், “மச்சான் ஆளவிடு என்று எடுக்கிறாங்கள் ஓட்டம். சிலர் காரடிக்குப் போயிற்று வாறன் என்று போனவர்கள் தான், திரும்பி வரவேயில்லை. தப்பித்தவறி கண்டால் பயந்து எடுக்கிறாங்கள் ஓட்டம்.

வாசிப்புப்பழக்கம் நல்லாக்குறைஞ்சு போச்சு மச்சான். எழுதியதை வாசித்துக் கருத்துச் சொன்னால்தானே எழுதியவனுக்கு ஆவல் பிறக்கும்.அதைத்தானே ஒரு எழுத்தாளன் ஆவலோடு எதிர்பார்ப்பான். இன்னும் எழுத வேண்டுமென்கிற ஆசை வரும்.புத்தகங்கள் தானே,ஒவ்வொரு இனத்தின் புக்ககங்கள். ஒரு எழுத்தாளன் எத்தனை கதாபாத்திரங்களைப் புதிதாகப் படைக்கிறான்.அதனால்தானே அவன் படைப்பாளியாகிறான். எங்கட இளமைக் காலத்தைத் திரும்பிப்பார்த்தால். இப்போதிருக்கிற நிலமையை நம்ப முடியாமல் இருக்கிறது. நாங்கள் புத்தகம் வாசிக்கவென்றே பெரும்பகுதியைச் செலவழித்திருக்கிறோம்.



பொன் புத்திசிகாமணி (யேர்மனி)

நூலகங்கள் எங்களை அக்கறையோடு வரவேற்றன. அதனால் நாம் வளர்ந்தோம். ஒரு நாளில் சில மணித்தியாலங் களையாவது அதற்காகச் செலவளித்திருக்கிறோம். நண்பர்கள் எங்கே என்று தேடி,எங்கும் போக வேண்டியதில்லை.நேராக நூலகம் சென்றால் அங்கு பார்க்கலாம்.அங்கே அவர்கள் எதையாவது, வாசிச்சுக் கொண்டிருப்பார்கள். புத்தகத்தை வாசித்துவிட்டு,அதைப்பற்றி உரையாடுவதும் சுவார்சியமான அனுபவங்கள்.அதற்காகவே கடற்கரைக்குப் போவோம். பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பங்கிட்டு அலசிக் கொள்வோம்.எங்களுக்குள் விவாதங்கள் எழும் அத்தனையும் ஆரோக்கியமானவை.. நாவல்களில் வாழ்ந்த கதைமாந்தரோடு நாங்களும் வாழ்ந்திருக்கிறோம். என்றோ வாசித்த புத்தகங்கள் இன்னுமே நினைவில் நிற்கின்றன.

சின்ன வயதில் இந்திய எழுத்தாளர்கள் எம்மை ஆட்கொண்டார்கள். எழுத்துகில் ஈழத்து இலக்கியங்கள் பெருமளவில் வர ஆரம்பிக்க அவைகளுக்கும் நாம் அடிமையானோம். எழுத வேண்டுமென்கிற ஆவல் அதனாலேயே எங்களுக்குள்ளும் எழுந்தது. நானும், நீயும் புத்தகம் எடுப்பதற்காக பல மைல்கள் சைக்கிளில் சென்றிருக்கிறோம். ஐந்து பத்தென்று புத்தகங்ளைக் கொண்டு வந்து வாசித்து விட்டு திரும்பவும் கொண்டு போய்க் கொடுப்போம். இவ்வுலகில் எழுத்தும் வாசிப்பும் இல்லாவிட்டால்,வரலாறுகள் தெரியாமல் போய்விடும்.

நல்லதொரு விவசாயி நிலத்தைப் பண்படுத்தி,உழுது பயிரிட்டு அதனால் வரும் விதவிதமான காய்கறி,பழங்களை மக்களுக்கு அளிக்கின்றான். எது உயிர்ச்சத்து நிறைந்ததென தேடி அதையே பாவனையாளர்களுக்குக் கொடுக்கிறான். அதனை வாங்கி உண்பவன் மகிழ்ந்து ஆரோக்கியமாக வாழ்கிறான். ஒவ்வொரு எழுத்தாளனும் இந்த சமுதாயத்திற்குத் தேவையான இலக்கியங்களைத் தேடித் தேடி எழுதி வாசகர்கள் மத்தியில் சமர்ப்பிக்கிறான். அது அவர்களின் அறிவை வளர்க்கிறது. கிரேக்க ஞானி சாக்கிரட்டீஸ் கூறிய கருத்திது.

எழுத்துகள் இல்லாவிட்டால் எல்லாமே இல்லாது போய்விடும்.படிப்பறிவே இல்லாதவர்கள் வாசிப்பின் பின் சிறந்த எழுத்தாளராக மாறி இருக்கிறார்கள்.உதாரணத்திற்கு புகழ்பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனைச் சொல்லலாம்.மூன்றாம் வகுப்புப் படித்த ஜெயகாந்தன் அதிசயிக்கத்தக்க இலக்கியங்களை தமிழுக்குக் கொடுத்திருக்கிறார்.சாகித்திய விருது ஞானபீடவிருது என்று அதி உயர் விருதுகளைப் பெற்று இறப்பிற்குப் பின்னும் அவர் இலக்கியங்களால் வாழுகிறார்.

அவரது ஆக்கங்கள் வாசகர்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றன. இவ்வாறு எத்தனை எழுத்தாளர்களைச் சொல்லலாம். அப்போது வாசகர்கள் நிறைய வாசித்தார்கள்.தட்டிக் கொடுத்தார்கள் இப்போது மிக மிகக் குறைவானவர்களே வாசிக்கிறார்கள். வாசகர்கள் இல்லாவிட்டால் எழுத்தாளனே இல்லை. இதற்குக் காரணமும் உண்டு. காட்சி ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்துகிற இந்தக் காலத்தில் எழுத்து ஊடகங்களின் ஆதிக்கம் குறைய ஆரம்பித்து விட்டன. இது அறிவியலின் வளர்ச்சி தான். ஆனாலும் தரமற்ற ஆக்கங்களால் சமுதாயம் அழிந்து கொண்டிருக்கிறது. இவை பற்றி நானும் நீயும்தான் கதைப்போம்.வாசிப்பின் அவசியம் பற்றி விழிப்புணர்வு வேண்டும். ஏன் கனக்க எதற்கு,யேர்மனியில் எத்தனை சஞ்சிகைகள்,பத்திரிகைகள் தோன்றின. இன்று எத்தனை தொடர்ந்து வெளிவருகின்றன. “மண்“சஞ்சிகை,(33 வருடம்) நீண்ட காலம். “வெற்றிமணி“ பத்திரிகை முப்பது வருடங்களுக்கு மேல்.“அகரம்“ (13 வருடம்) தமிழ் ரைம்“ இவற்றைச் சொல்லலாம்.

இதனை வெளிக்கொணர்வதில் ஆசிரியர்கள் எவ்வளவு கஸ்ரப்படுகிறார்கள். சிலர் வாசிப்பார்கள்,பலர் என்ன செய்வார்கள் என்றே தெரியாது.ஆனாலும் ஆசிரியர்களுக்கு ஒரு நம்பிக்கை. இவைகளும் இல்லாவிட்டால் ஆக்க தாரர் எழுத்தின் மீது மோகம் கொண்டவர்கள் தங்கள் பசியைத் தீர்க்க எங்குதான் போவார்கள். இன்றைய காலம் இளவயதிலேயே மறதி நோயால் பலர் அவதியுறுகிறார்கள். மறதிக்கு மருந்து புத்தகங்களே!புத்தகங்கள் வாசிப்பதும் நண்பர்களோடு பகிர்ந்து கொள்வதும் நினைவாற்றலை அதிகரிக்கும் என அறிஞர்கள் கூறுகிறார்கள். நாமாவது இதனைக் கடைப்பிடிப்போம்.





# இலக்கியத்தில் இவர்கள்...

42

கௌசி (யேர்மனி)

# பழைமை அழிவதில்லை மறைந்திருக்கின்றது

காலம் தன்னுடைய பூதக்கண்ணாடியை அணிந்து கொண்டு உலகத்தைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டே பயணம் செய்கின்றது. அதில் அடையாளப்படுத்தப்பட்டும் உதாசீனம் செய்யப்பட்டும் பலர் தன்னுடைய பாதையில் வந்து போகின்றார்கள். துடிப்பும் சோர்வின்மையும் தூங்கவிடாமல் பலரை உச்சத்தில் கொண்டு சென்றாலும் காலம் போகிற போக்கில் துடைத்தெறிந்து விட்டுப் போகின்றவர்களும் இருக்கவே செய்கின்றார்கள். ஆனால் இன்று தொழில் நுட்பம் பொறுக்கி எடுத்து அடையாளப்படுத்துகின்ற வேலையைச் செய்கின்றது.

வள்ளுவர் வாழ்ந்தார் வாழ்ந்து கொண்டு இருந்தார் போற்றப்பட்டார். போற்றப்பட்டுக் கொண்டு இருக்கின்றார். இன்றைய உலகம் மிதமிஞ்சி அவரைப் போற்றிக் கொண்டாடுகின்றது. அவருக்கு உரிமைப போர் நடக்கின்றது. இந்நிலை அவரை விஞ்சிப் படைக்க யாருமில்லை என்பதை அடையாளப் படுத்துகின்றது. இல்லை என்பதை விட வள்ளுவரின் ஒரு குறளை வாய் மொழிந்தால் தலைசிறந்த பேச்சாளன்



கல்வியாளன் என்று போற்றப்படும் நிலைக்கு மனிதர்கள் உயர்த்தப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது இன்றைய உலகில் தொல்காப்பியர் யுகம் தோன்றியுள்ளது. தொல்காப்பியத்தைப் பல்கலைக்கழகத்தில் கற்பித்தால் பரீட்சையைக் கவனத்தில் கொண்டு கற்றுவிட்டு தொல்காப்பியரைத் தவிக்க விட்ட காலம் ஒன்று இருந்தது. இன்று உலகம் முழுவதும் இணையவழியில் தொல்காப்பியப் பாடம் கற்பிக்கும் நிலை தோன்றியுள்ளது. சினிமாவில் தொல்காப்பியத்தைத் தேடுகின்றார்கள். தொல்காப்பியருக்குச் சிலைகள் நின்று நிமிர்கின்றன.

காரிகை கற்றுக் கவி பாடுவதிலும். பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே என்னும் பழமொழியின் படி யாப்பிலக்கணம் கற்ற போது எப்போது இக்கற்கை நெறியை முடிப்போம்? என்று இருந்த நிலை மாறி இப்போது இணையவழி கல்வியில் யாப்பு இலக்கணம் அரங்கேறுகின்றது. ஆனால் கவியாற்றல் என்பது சிலருக்கு பிறப்பிலேயே வரும். அதை மெருகேற்றப் பலர் முனைந்து வெற்றி கண்டுள்ளார்கள்.

இவ்வாறு ஆடை தொடங்கி உணவு இலக்கியம் வரை பூமி சுழற்றிக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது. இதுதான் இன்று பழைமை அழிவதில்லை. மறைந்திருக்கின்றது என்ற சிந்தனையை வலுவடையச் செய்திருக்கின்றது.

சங்க இலக்கியமாகிய கலித்தொகையிலே

*பல உறு நறுஞ் சாந்தம்*
*படுப்பவர்க்கு அல்லதை*
*மலையுளே பிறப்பினும் மலைக்கு*
*அவைதாம் என் செய்யும்?*
*நினையுங்கால் நும் மகள் நுமக்கும்*
*ஆங்கு அனையளே*

என்னும் வரிகளை எடுத்து நோக்கினால் மலையிலே தோன்றும் சந்தனம் மலைக்குச் சொந்தமில்லை கடலிலே தோன்றிய முத்து கடலுக்குச் சொந்தமில்லை அதே பொருளமைந்த பாடலைக் கண்ணதாசன் பட்டிணத்தில் பூதம் திரைப்படத்தில் அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி எனத் தொடங்கும் பாடலில்

*மலையின் சந்தனம் மார்பின் சொந்தம்*
*மங்கையின் இதயமோ*
*காளையின் சொந்தம்*
*என்று எழுதியிருக்கிறார். அதேபோல்*

*வாயின் சிவப்பை விழிவாங்க*
*மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத்*
*தோயக் கலவி அமுதளிப்பீர்*
*துங்கக் கபாடம் திறமினோ என்ற*
*கலிங்கத்துப்பரணி பாடலை*

வாயின் சிவப்பு விழியிலே மலர்க்கண் வெளுப்பு இதழிலே காயும் நிலவின் அழகிலே காலம் நடக்கும் உறவிலே



என்று அன்னை இல்லம் படத்திலே மடிமீது தலை வைத்து விடியும் வரை தூங்கவோ என்ற பாடலிலே கொண்டு போய் வைத்திருக்கின்றார்.

எனவே சுற்றிச் சுழலும் காலச்சக்கரத்தில் ஒன்று மட்டுமே நிஜம். வலிமையுள்ளது வாழும் என்ற சார்ள்ஸ் டாவின் விதியின் படி படைப்பவை அனைத்தும் நிலைப்பதில்லை. வலிமையானது காலம் தாண்டித் தேடப்படும். தேடப்படும் தேடலாக எம்முடைய எண்ணங்களும் அமைய வேண்டுமானால்

*உள்ளியது எய்தல்*
*எளிதுமன் மற்றும்தான்*
*உள்ளியது உள்ளப் பெறின்*

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி ஒருவன் சோர்வில்லாமல் செயற்பட்டால் மூளையைத் தோண்டி



முழுவதுமான நற்சிந்தனைகளை உருவாக்க முடியும்.

உதாரணமாக படைப்பின் அனைத்தும் காரண காரியங்களுடனேயே படைக்கப் பட்டுள்ளன அல்லது உருவாகியுள்ளன. இந்தச் சிந்தனையை மூளைக்குள் போட்டு வைத்தேன். அது வெளியே வருகின்ற போது. ஏன் என்னும் கேள்வியை என்னிடம் கேட்கின்றது.

எமது கண்களுக்குப் பார்க்கும் சக்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது உண்மையே. தொலைதூரப் பார்வை கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. மேல் பகுதியை விட கீழ்ப்பகுதியைத் திருப்பாமல் பார்க்க முடியாது. முகங்களை முழுவதுமாகப் பதிந்து வைத்திருக்காது. நீங்கள் நினைத்துப் பார்த்தாலும் புகைப்படத்தில் போல் உங்கள் முகம் தெரியாது. கனவில் கூட நீங்கள் காணுகின்ற முகம் கலங்கிய நிலையிலேயே தெரியும். அதைவிட நுண்ணுயிர்கள் வைரஸ் போன்றவற்றை உங்களுடைய கண்களால் காண முடியாது. கோடிக்கணக்கான உயிரினங்கள் பூமிப் பரப்பில் வாழ்ந்து கொண்டிருந்தும்

28 ஆம் பக்கம் பார்க்க...









# கடற் கவிதை

# Skomer வர்ணத்தீவின் பஞ்சவர்ணக் கதை!

## கிட்டத்தட்ட 10 மீன்களை தனது சொண்டில் ஒன்றாகச் சேர்த்த பின்னரே தனது பொந்திற்குத் திரும்பிவரும்

ஒவ்வொரு பயணமும் அர்த்தமுள்ள ஆயிரம் கதைகளை நமக்குக் கற்பித்துவிடுகின்றது. அந்தவகையில் எனது இந்தப் பயணக் கதை கடல் கிளிகளின் புகைப்பட வேட்டை பற்றியது. இந்தக் கடல் கிளிகளை புகைப்பட மெடுப்பதற்காக வனவிலங்கு புகைப்படக்கலைஞரான எனது நண்பர் தினேஷின் உதவியோடு நான் சென்ற இடம்தான் Skomer தீவு.

இங்கு தங்கியிருந்து புகைப்படம் எடுப்பதற்கான ஏற்பாடுகளை கிட்டத்தட்ட பயணப்படுவதற்கு முன் நான்கு மாதங்களுக்குள் நண்பரின் உதவியோடு தயார் செய்தாயிற்று. ஆனால் இங்கு போவதற்காக ஒருவருடம் முதலே பதிவு செய்தாக வேண்டும். ஏற்கனவே பதிந்தவர்களில் யாரோ ஒருவர் பதிவை இரத்துச் செய்தமையினால்தான் அந்த வாய்ப்பு எமக்குக் கிடைத்திருந்தது. Skomer என்பது இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு தீவு. வேல்ஸ் என்கின்ற மாநிலத்துக்குக்குரியது. இந்தத் தீவானது 3.2கிலோமீட்டர் நீளமும் 2.4கிலோமீட்டர் அகலமும் கடல்மட்டத்திலிருந்து சராசரி உயரம் 60 மீட்டரையும் உடைய சிறிய தீவாகும். Skomer தீவில் இரவுவேளைகளில் 15 அல்லது 16 பேர் வரைதான் தங்கிச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள். எமக்கான உணவுகளையும் நாம்தான் எடுத்துச்செல்ல வேண்டும். இனி எனது பயண அனுபவங்களுக்குள் நுழைவோம்.

ஜேர்மனியின் Cologne - Bonn விமான நிலியத்திலிருந்து London Heathrow விமான நிலையத்தையடைந்தேன். அங்கு என்னுடைய நண்பருடன் இணைந்து, நேரம் 11:30 மணியளவில் Skomer தீவை நோக்கிய எமது 350கிலோமீட்டர் பயணத்தை ஆரம்பித்து 6:30 அளவில் கப்பல் ஏறும் இடத்தைச் சென்றடைந்தோம். 25நிமிட கப்பல் பயணத்தையடுத்து தீவினையடைந்தோம்.



எமது பொருட்களை எடுத்துக்கொண்டு அங்கு அமைக்கப்பட்டுள்ள படிகளில் ஏறி அனைவரும் சந்திப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள இடத்தைச் சென்றடைந்தோம். அங்கு எமக்கான வழிகாட்டுதல்களும் நடைமுறைகளும் விளக்கப்பட்டன. இங்கு தங்குமிடத்திற்கு வெளியில் தீமூட்டக்கூடாது. Drone பறக்கவிடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இங்கிருக்கும் கற்களையோ அல்லது பறவைகளின் முட்டைகளையோ நாம் எடுத்துச் செல்ல முடியாது. இங்கு வலையமைப்பு இல்லாததால் தொலைபேசிகளையும் பயன்படுத்த இயலாது.



"Wildlife Photographer"
Mr.L.Mohanaraj

இந்தத் தீவில் ஒரே ஒரு பாழடைந்த கட்டடம் தான் உள்ளது. அதை பண்ணை வீடு என்பார்கள். இதுதான் அனைவருக்குமான தங்கும் இடம். இங்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கழிப்பிட வசதிகளும் சமையலறை மற்றும் குளிர்ந்த நீர் வசதிகளும் மாத்திரமே உண்டு.

கிட்டத்தட்ட 30 நிமிட நடைபயணத்தில் தங்குமிடத்தையடைந்த பின்னர் 10:30 மணியளவில் கடல் கிளிகளை புகைப்படமெடுக்கச் செல்வதற்காகத் தயாரானோம். அந்தத் தீவின் மூன்று இடங்களில் மட்டுமே இந்தக் கடற்கிளிகளை புகைப்படமெடுக்க முடியும். முதலாவது இடத்திற்குச் சென்றால் கடற்கிளியையும் சூரிய உதயத்தையும் சேர்த்து எம்மால் பார்க்க முடியும். இரண்டாவது இடத்திற்குச் சென்றால் தாய்ப்பறவை தனது குஞ்சுகளுக்கு இரையூட்டுவதைக் காணக்கூடியதாக இருக்கும். மூன்றாவது இடத்தில் சூரியன் மறையும் காட்சியோடு இணைத்து கடற்கிளிகளைக் காணக்கூடியதாக இருக்கும்.

இந்த நேரம் இரண்டாவது இடத்தில் புகைப்படம் எடுப்பதற்கே பொருத்தமா னது என்பதால் அந்த இடத்தை நோக்கிச் சென்றோம். அந்த இடத்தில் ஏராளம் பறவைகளைக் காணக்கூடியதாக இருந்தது. ஆரம்பத்தில் கடற்கிளிகளை ரசித்து அதன் நடத்தைகளை புரிந்து கொண்டபின் நான் கொண்டுசென்ற Nikon z8 , Nikon z6ii மற்றும் NIKKOR Z 400/2.8 TC VR S, NIKKOR 70-200 mm 1:2,8E FL ED VR ஆகிய புகைப்படக்கருவி மற்றும் வில்லைகளை வைத்து இயக்கி புகைப்படங்களை எடுக்க ஆரம்பித்தேன்.

காற்று வழமையை விட அதிகமாக வீசிக்கொண்டிருந்தமையால் பறவைகளின் இயல்பான நடத்தைகளில் சிறிது மாற்றங்களிருக்கும். நண்பகல்வேளையை நெருங்கியதும் புகைப்படமெடுப்பதை நிறுத்திவிட்டு பண்ணைவீட்டை நோக்கித் திரும்பிவிட்டோம். மதிய உணவை முடித்து மீண்டும் அதே இடம் நோக்கி புகைப்படமெடுக்க 02:30 அளவில் புறப்பட்டோம்.

இந்த தீவிற்கு ஒரு நாளில் 3தடவைகள் கப்பற் போக்குவரத்து நடைபெறும். தினமும் 9:00, 10:00, 11:00 ஆகிய நேரங்களில் வருகைதரும் 50 பேரும் முறையே 3:00, 4:00, 5:00 மணி நேர அளவுகளில் வெளியேற வேண்டும். மதிய நேரத்தில் ஏறக்குறைய 175 நபர்களைக் கொண்டதாக இருக்கும்.

முதலாவது இடத்தில் சூரிய உதயத்தைக் காண முடியவில்லை. எனவே இரண்டாமிடத்திற்குச் சென்று புகைப்படங்களை எடுக்க முடிந்தது.

Puffin எனப்படும் கடல் கிளியானது இந்தத் தீவினைச் சார்ந்திருப்பதற்கு அதன் நிலவமைப்பே சாதகமாயிருக்கிறது. கடல் மட்டத்திலிருந்து 60/70 மீட்டர் உயரத்திலிருக்கும் இந்த தீவின் நிலம் மென்மையானதாயும், பொந்துகள் அமைப்பதற்கு ஏற்ற விளிம்புகள் காணப்படுவதாலும் கடற் கிளிகள் இதனை அடியொற்றிக் காணப்படுகின்றன.

23 ஆம் பக்கம் பார்க்க...



# கடற் கவிதை

## Skomer வர்ணத்தீவின் பஞ்சவர்ணக் கதை!



இந்தப் பறவையானது நிலத்தின் விளிம்புகளில் பொந்து அமைத்து அதற்குள்ளே முட்டையிட்டு அடைகாக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. அலையில் நீந்தக்கூடியதும், கடல் மீன்களை இரையாக உட்கொள்ளக்கூடியதுமான இந்தக் கிளிகள் ஏனைய கடற் பறவைகளிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளவும் தமது குஞ்சுகள் பாதுகாப்பாக கடலை நோக்கி பறப்பதற்கு ஏற்றவகையிலும் இந்த பொந்துகளை பயன்படுத்துகின்றன. 2023ஆமாண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் ஏறத்தாழ 42,500 கடற்கிளிகள் இனப்பெருக்கம் செய்து தீவைவிட்டு வெளியேறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கடற்கிளிகள் தரையிலிருந்து கடலை நோக்கி 15கிலோமீட்டர் தூரம்வரை பறந்துசென்று கடலிலுள்ள மீன்களைப் பிடிக்கக்கூடியது. இதனால் 200 அடி ஆழம்வரை நீந்தக்கூடியதாக இருந்தாலும் நீரின் மேற்பரப்பில் வரும் மீன்களை 10-20 செக்கன்களில் பிடிக்கக்கூடியது. கிட்டத்தட்ட 10 மீன்களை தனது சொண்டில் ஒன்றாகச் சேர்த்த பின்னரே தனது பொந்திற்குத் திரும்பி வரும்.

இதன் வாழ்க்கை வட்டம் மிகவும் சுவாரசியமானது. இந்த பெண் பறவையானது ஒரே ஒரு முட்டையை மாத்திரமே பிரசவிக்கும். அதன்பின்னர் ஆண்பறவையும் பெண்பறவையும் இணைந்து 06கிழமைகள் அடைகாத்து, குஞ்சு பொரிக்கும். பிறந்த குஞ்சு மீண்டும் 06கிழமைகளில் 300 கிராம் நிறையை அடையும்வரை இந்த பொந்தினுள்ளே தான் தங்கியிருக்கும். இதற்கு ஒரு நாளில் 05இலிருந்து 08தடவைகள் இரண்டு பறவைகளும் இணைந்து உணவினையூட்டும்.

கிட்டத்தட்ட 06கிழமைகளின் பின்னர் அந்தக் குஞ்சு கடலை நோக்கிப் பறந்து செல்லும். கடலுக்குள் சென்ற இந்தக் குஞ்சுப்பறவை ஏறத்தாழ 2வருடங்களுக்கு கரையை நோக்கித் திரும்பாது கடலிலேயே வாழும். அதன்பின் தனக்கு ஏற்ற துணை அமைந்ததும் பொந்தினை தேடிக்கொள்ள நிலம் நோக்கித் திரும்பும். எனினும் 05 வயதின் பின்னரே



இனப்பெருக்கத்திற்குத் தயாராகும். இவற்றின் ஆயுட்காலம் சராசரியாக 25வருடங்களெனக்கூறப்பட்ட போதிலும் அண்மைய தரவுகளின்படி சில கடற்கிளிகள் 38வருடங்கள் இந்தத் தீவில் வாழ்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த கடற்கிளிகளை புகைப்படமெடுக்கும்போது பல சுவாரசியமிக்க நிகழ்வுகள் நடந்தேறும். கிளிகள் மீனைக் கொண்டுவரும்போது கடற்காகங்கள் அவற்றை விரட்டும். மீனைக் காப்பாற்றிக்கொள்ள அவை விரைவாக பொந்துக்குள் நுழையும். இந்த சுவாரசியங்களை புகைப்படமாக எடுத்து வைத்துக் கொண்டேன்.



மறுநாள் காலை நாங்கள் தீவை விட்டு பயணப்படவேண்டும் என்பதால் சூரிய உதயத்தை மாத்திரம் புகைப்படமெடுக்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் அதிகாலை வேளையில் மீண்டும் மேக மூட்டம் மிக அதிகமாக இருந்ததால் தங்குமிடத்திற்கே திரும்பிவிட்டோம். பயணப்படுதலுக்கான ஆயத்தம்க்களைச் செய்து தீவைவிட்டு வெளியேறினோம்.

சில வேளைகளில் இயற்கை எமது திட்டமிடல்களை மாற்றியமைத்தாலும், இந்தப் பயணம் எனக்கு நிறைவான மகிழ்ச்சியையே அளித்திருந்தது. இந்த இரண்டு நாட்களில் எனக்குத் தேவையான புகைப்படங்களை எடுத்துக் கொண்டாலும், இந்தப் பரந்த தனித்த தீவில் 25 பேருடன் மாத்திரம் தங்கி நின்ற அனுபவம் புதுமையானது. இந்த வெளிமுழுவதும் நட்சத்திரங்கள் நிறைந்த வானம், பறவைகளின் இன்னிசை என்று நிரம்பியிருந்தது. ஆனாலும் சூரிய அஸ்தமனத்தையும் சூரிய உதயத்தையும் புகைப்படம் எடுக்கமுடியவில்லை என்பது எனது சிறு கவலை. எனவே நான் 2024 ஆமாண்டில் மீண்டுமொரு Skomer தீவு நோக்கிய இன்னொரு பயணத்திற்கான திட்டங்களை ஆரம்பித்துள்ளேன். Skomer தீவே, கடற்



கவிதைகளின் உதயத்தையும் அஸ்தமனத்தையும் காண்பதற்காய் இந்தப் புகைப்படக் கருவிகளோடு நான் மீண்டும் வருவேன்!



# இதுவே கடைசி பதிவு



**சிந்தனை சிவவினோபன் (யேர்மனி)**

ஆம் தலையங்கத்தில் சொன்னதைப் போன்று இதுவே கடைசி பதிவு. இந்த Trading எனப்படும் தொடரின் கடைசி பதிவாக நீங்கள் ஒரு Accountil Create பண்ணுவது எப்படி? அதில் Trading பண்ணுவது எப்படி என்று முழுமையாக பார்க்க இருக்கின்றோம். இந்தக் கட்டுரையின் முடிவில் உங்களில் யார் எல்லாம் பயிற்சி செய்து பார்க்கின்றீர்களோ அனைவராலும் வெற்றி பெற முடியும். ஆனால் வெற்றியின் அளவு உங்கள் புரிந்துணர்விலும் பயிற்சியிலும் அடங்கி உள்ளது. வாருங்கள் ஒரு Account Create பண்ணுவது எப்படி என்று பார்ப்போம்.

மேலே கொடுக்கப்பட்டு இருக்கின்ற இந்த பார் கோட்டை நீங்கள் உங்கள் Phone மூலமாக Scan பண்ணினால் உங்களுக்கு ஒரு பக்கம் திறக்கும். இங்குதான் உங்களுடைய Accountil Create பண்ண போகின்றீர்கள். இது மிகவும் இலகுவான ஒரு விடயம் ஒரு Facebook Account Create பண்ணுவதை போன்று இலகுவானது. உங்களுடைய Email கொடுத்து, நீங்கள் விரும்புகின்ற ஒரு Password கொடுத்து Account Create பண்ணிக் கொள்ளலாம். இப்போது உள்ளே சென்றீர்கள் என்றால், இந்த பகுதி உங்களுக்கு சற்று புதிதாக இருக்கலாம். இதுதான் வணிகம் செய்யும் பகுதியாக அமையும். இங்கு பல கம்பெனிகள் இருக்கின்றன. நீங்கள் பணம் முதலிடப் போகிறீர்களா, அல்லது வியாபாரம் செய்யப் போகிறீர்களா, என்பதை எவ்வாறு முடிவு எடுக்க முடியும் என்றால், முதலில் இடது பக்கத்தில் கீழே பார்த்தீர்கள் என்றால், Demo Mode என்று இருக்கும். அதை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும் Demo Modebல் உங்களுக்கு 40,000 Euro பணம் கொடுக்கப்படும். இந்த 40,000 Euro பணம் உண்மையான பணம் கிடையாது. நீங்கள் பயிற்சி செய்வதற்காக உங்களுக்கு வழங்கப்படுகின்றனுபைவையட பணம். அந்த Demo Mode மூலமாக நீங்கள் Trading பண்ண ஆரம்பிக்கலாம்.




உதாரணத்திற்கு Gold,அதற்குப் பக்கத்திலேயே, இன்று Gold Market லாபமாக இருக்கின்றதா? நட்டமாக இருக்கின்றதா என்பதை போட்டு இருப்பார்கள். சிகப்பு நிறத்தில் இருந்தால் மார்க்கெட் விழுந்து கொண்டிருக்கின்றது, அப்படி என்றால் நீங்கள் முன் எழுதப்பட்ட கட்டுரையின் அறிவுறுத்தல் படி, விற்க வேண்டும். பச்சை நிறத்தில் இருக்கின்றது என்றால் மார்க்கெட் வளர்ந்து கொண்டிருக்கின்றது, ஆகவே வாங்க வேண்டும். ஆனால் படித்ததை அப்படியே பயன்படுத்தினால் முழுமையாக வெற்றி பெற முடியாது. நீங்கள் அந்த Gold என்கின்ற அதை Click பண்ணும் பொழுது



கீழே அதற்கான வரைபடம் இருக்கும். நான் ஏற்கனவே முதல் எழுதிய கட்டுரையில் சொன்னதைப் போன்று பச்சை சிகப்பு அல்லது கருப்பு வெள்ளை கோடுகளான அந்த வரைபடத்தை உங்களால் பார்க்கக் கூடியதாக. இருக்கும் அந்த வரைபடத்தை உங்களுக்கு பிடித்தால் போல் மாற்றியும் அமைக்க முடியும். இதை சற்று பயிற்சி செய்து பாருங்கள்.

இப்போது அந்த வரைபடத்தின் உதவி மூலமாக அந்த ஏற்ற இறக்கத்தை உங்களால் கணிக்க முடிகின்றதா என்று பாருங்கள். இந்த வரைபடத்தை பார்க்கும் பொழுது அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் 2 மணி நேரத்துக்குள் இந்த வரைபடம் மேலோக்கி ஏறுமா? அல்லது கீழ்நோக்கி இறங்குமா என்கின்ற உங்களுடைய கணிப்பை யோசித்து, உங்கள் கணிப்பை வைத்துக்கொண்டு மேல்நோக்கி ஏறுமென்று நீங்கள் நினைத்தீர்கள் என்றால் மட்டும், வாங்குங்கள் அல்லது கீழ்நோக்கி இறங்கும் என்று நீங்கள் கணித்தீர்கள், என்றால் விற்க வேண்டும்.



நீங்கள் விற்கின்றேன் என்று ஒரு 50 Euroக்கு பணம் கட்டியிருந்தால், அந்த மார்க்கெட்டும் கீழ் நோக்கி இறங்கியிருந்தால் எத்தனை யூனிட் இறங்கியதோ அத்தனை யூனிட்டுக்கு 50 Euroபடி உங்களுக்கு பலமடங்கு லாபத்தை பெருக்கித்தரும். ஆனால் மேலே ஏறியிருந்தால் உங்கள் 50 Euroவும் காணாமல் போய்விடவும் வாய்ப்புள்ளது. ஆகவே Demo Mode டில் வைத்து Test gண்ணிப் பார்த்து முழுமையாக கற்று, அதன் பின் உங்கள் பணத்தை முதலிடவும். அதே போல் தான் மேலே ஏறும் என்று நினைத்து வாங்கினால், வாங்கிய போது மேலேயும் ஏறியிருந்தால் உங்களுக்கு பல மடங்கு லாபம் வரும், இல்லாவிட்டால் கட்டிய பணம் மட்டுமே போகும், வேறு நட்டம் வராது.

இதுதான் இதில் இருக்கின்ற விடயம். மற்றைய அனைத்தும் கடந்த கட்டுரையில் கூறியிருக்கின்றேன். அதை படிக்காதவர்கள் அந்த இரு கட்டுரைகளையும் வாசியுங்கள். இதைத்தொடர்ந்து மிகுதி அனுபவங்கள் அனைத்தும் செய்து பார்த்து பெற்றுக்கொள்ள வேண்டியவை, ஆகவே உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் நீங்கள் வெற்றிமணியை தொடர்பு கொண்டு என்னுடைய இலக்கத்தை பெற்றுக் கொள்ளலாம். நான் உங்களுக்கு மேலதிக வழிகாட்டலை கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றேன்.

"இறைபணிக்கினியவர்" "சமூகத்தொண்டர்"

## அமரர். நா.இரவீந்திரன் அவர்களுக்கு வெற்றிமணியின் அஞ்சலி



புங்குடுதீவு – (1ம் வட்டாரம்) பிறப்பிடமாகவும்
யேர்மனி ஹற்றிங்கன் நகரை வாழ்விடமாகவும் கொண்டவர்.
யேர்மனி கற்றிங்கன் ஸ்ரீவரசித்திவிநாயகர் ஆலயத்தின் ஸ்தாபகரும் முன்னாள்
தலைவரும் ஸ்பொக்கோவில் ஆரோப்ரசிரேட் வியாபார
ஸ்தாபனத்தின் உரிமையாளரும் சமூகத்தொண்டனுமான
திரு நா.இரவீந்திரன் அவர்களின் மறைவு பெரும் இழப்பாகும்.

வெற்றிமணி பத்திரிகைக்கு மிக நீண்டகாலம்
அனுசரனை தந்து ஆதரித்தவர் 2008ம் ஆண்டு சிவத்தமிழ் விழாவில்
வெற்றிமணி இறைபணிக்கினியவர் என்னும்
விருதினை வழங்கி கௌரவம் செய்தது.
1990 களில் பல கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு
பெருமாதரவு அளித்தவர்.
அவர் ஆத்மா சாந்தியடைவதாக.



அமரர் நா.இரவீந்திரன்
பிறப்பு : 12.7.1951
மறைவு : 17.01.2024

காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14



# இலங்கையில் காதலும் திருமணமும்

அன்பு, மனித வாழ்வின் இருப்பின் சாரத்தில் பின்னிப் பிணைந்த ஒரு ஆழமான உணர்வு. காலம், கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைக்கு அப்பாற்பட்ட ஒன்று. அதன் சிக்கலான தன்மையும் பன்முகத்தன்மையும், கலை, இலக்கியம், தத்துவம் மற்றும் அறிவியல் மூலம் ஆராயப்பட்ட, அனைவரையும் ஆர்வத்துடன் கவர்ந்து இழுக்கும் புதிர்களை உள்ளடக்கியதாக அமைகிறது. அன்பின் பல்வேறு பரிமாணங்களையும் இதயங்களை ஒன்றாக இணைக்கும் இழைகளையும் நோக்குவோம்.

அன்பு என்பது இது தான் என்று சொல்லக்கூடிய துல்லியமான வரையறையை கொண்டிருப்பதில்லை, ஏனென்றால் அது எண்ணற்ற வடிவங்களில் வெளிப்படுகிறது. குடும்ப உறுப்பினர்களிடையே பகிரப்படும் மென்மையான பாசம் முதல் கொண்டு உறவுகளில் உருவாகும் உணர்ச்சிபூர்வமான பிணைப்புகள் வரை, அன்பு வெவ்வேறு சாயல்களைப் பெறுகிறது. இது மொழியின் எல்லைக்குள் முடக்கப்பட்டு மட்டுப்படுத்தப்படாது செயல்கள், சைகைகள் மற்றும் பேசப்படாத இணைப்புகள் மூலம் அதன் சாரத்தை வெளிப்படுத்தும் ஒரு உணர்ச்சியாக உள்ளது.

## அன்பின் பல முகங்கள், வடிவங்கள் மற்றும் வெளிப்பாடுகள்


குடும்ப அன்பு: பல மனிதர்களின் வாழ்க்கைக்கு மையமாக இருப்பது குடும்பங்களுக்குள் இருக்கும் அன்பு. இது தனிநபர்களை வளர்க்கும், ஆதரிக்கும் மற்றும் வடிவமைக்கும் அடித்தளம். பெற்றோரின் பாதுகாப்பு அன்பு முதல் உடன்பிறந்தவர்களிடையே நட்புறவு கொள்ளுதல் வரை, குடும்ப அன்பு என்பது உணர்ச்சி நல்வாழ்வின் அடித்தளமாக இருக்கின்றது. குடும்ப அலகுகளுக்குள் காணப்படும் நிபந்தனையற்ற ஆதரவு மற்றும் புரிதல் ஒரு தனிநபரின் அடையாளம் மற்றும் மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை, சொந்தம் என்ற ஆழ்ந்த அரவணைப்பை உருவாக்குகின்றது.

காதல்: காதல் மனதை கவரும் ஒரு அழகிய நாட்டியம் போன்றது. அதன் விந்தையான பரவசத்தால் நம்மை மயக்குகிறது. அது ஒரு தீப்பொறி போல் தொடங்கி வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்பின் ஆழம் வரை, காதல் என்பது தனிநபர்களை ஒன்றிணைக்கும் ஒரு சக்தியாக திகழ்கின்றது. இது வெவ்வேறு நபர்களுக்கிடையில் பகிரப்பட்ட இருப்பின் உயர் மற்றும் தாழ்வுகளை வழிநடத்துகிறது. இங்கு பேரார்வம் மட்டுமல்ல, பரஸ்பர புரிதல், நம்பிக்கை மற்றும் தோழமை உள்ளடங்கியுள்ளது. காதல் அன்பின் பரிணாமம் நிறைந்த ஒரு பயணமாகும். ஏனெனில் இரண்டு நபர்கள் தங்கள் உணர்ச்சிகள், அபிலாஷைகள் மற்றும் பாதிப்புகளின் நுணுக்கங்களை கொண்டு வாழ்க்கையை வழிநடத்த இங்கு கற்றுக்கொள்கிறார்கள்.

தனிநபர்களிடையே பாசம்: இங்கு அன்பானது நட்பு எனும் வடிவத்தை பூணுகின்றது. காதலுடன் ஒப்பிடுகையில் நட்பு மேற்கொள்ளுதலானது பெரும்பாலும் பொறுப்புகளில் இருந்தும், குடும்ப அலகுகளில் இருந்தும்,உணர்ச்சி ஆழத்திலும் சற்று குறைவாக மதிப்பிடப்படுகின்றன. நண்பர்களுக்கிடையிலான பாசம் சிறந்த அன்பின் அழகை உள்ளடக்கியது. காதலுக்கு அப்பாற்பட்ட ஒரு இணைப்பு, அது ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், நம்பிக்கை கொள்ளுதல் மற்றும் தோழமை ஆகியவற்றின் அடித்தளமாக உள்ளது. தனிநபர்களிடையேயான பாசம் ஆனது குடும்பம் மற்றும் காதல் பிணைப்புகளுக்கு வெளியே ஒரு ஆதரவு அமைப்புக்கு பங்களிக்கிறது. தனித்துவமான முன்னோக்குகள், பகிரப்பட்ட சிந்தனைகள்,சிரிப்புகள் மற்றும் உரிமை பாராட்டக்கூடிய உணர்வை இது வழங்குகிறது. இந்த நட்புகள் காலத்தின் மாற்றங்கள், சோதனைகளை தாங்கும் திறன் கொண்டமைகின்றன. தொடர்ந்து மாறிவரும் உலகில் நட்பானது நிலையானதன்மையையும் ஆறுதலையும் அளிக்கின்றது.

## தன்மீதான அன்பு:

பெரும்பாலும் கவனிக்கப்படாத அம்சம் சுய-அன்பு. ஆரோக்கியமான ஆன்மாவின் கட்டாயமான மூலம். இது தன்னை ஏற்றுக் கொள்வது, பலம் மற்றும் பலவீனங்களை ஒப்புக்கொள்வது மற்றும் ஒருவரின் சொந்த இருப்புடன் சுவாதீயமான உறவை வளர்ப்பதை உள்ளடக்கியது. தன்மீதான அன்பை வளர்ப்பது இன்றைய காலகட்டத்தில் முக்கியமான ஒன்று. அது மனம் மற்றும் உணர்ச்சி நல்வாழ்வுக்கான அடித்தளமாகும். சுய-அன்பைக் கடைப்பிடிக்கும் நபர்கள் வாழ்க்கையில் தாம் எதிர்நோக்குகின்ற சவால்களு வெற்றிகரமாக முகம் கொடுக்கவும் அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்கவும், தங்கள் சமூகங்களுக்கு நேர்மறையாகப் பங்களிப்பு செய்யவும் ஏற்புடையதாக இருக்கின்றது.



பவதாரணி ரவீந்திரன் (நல்லூர்)

## அறிவியலில் காதல்:

நரம்பியல் அறிவியலின் பிரகாரம் காதல் ஆனது நரம்பியக்கடத்திகள் மற்றும் ஹார்மோன்களின்



தூண்டுகையால் வெளிப்படுத்துகிறது. ஆக்ஸிடாஸின், பெரும்பாலும் "காதல் ஹார்மோன்" என்று அழைக்கப்படுகிறது, இது பிணைப்பு மற்றும் இணைப்பை வளர்க்கிறது. அதே நேரத்தில் டோபமைன் மோகத்தின் பரவசத்தை தூண்டுகிறது. அன்பின் உயிரியல் அடித்தளத்தைப் புரிந்துகொள்வது அதன் மாய மயக்கத்திற்கு ஒரு விடை சேர்க்கிறது. நரம்பியக்கடத்திகள் மற்றும் ஹார்மோன்களின் சிக்கலான தன்மை காதலுடன் தொடர்புடைய உணர்ச்சி அனுபவங்களுக்கு உடலியல் அடிப்படையை உருவாக்குகிறது. இதய விஷயங்களில் மனம்

26 ஆம் பக்கம் பார்க்க...






# இலங்கையில் காதலும் திருமணமும்

மற்றும் உடலின் ஒன்றோடொன்றுடனான ஒருங்கிணைப்பை எடுத்துக் காட்டுகிறது.

### அன்பின் பரிணாமம்: மாற்றம் மற்றும் சவால்களை வழிநடத்துதல்

காதல் ஒரு நிலையான பொருள் அல்ல. அது காலப்போக்கில் உருவாகும் ஒரு மாறும் சக்தி. ஒரு குழந்தை மேல் தாய் வைக்கும் அன்பின் அடிப்படையில், சமுதாயம் செலுத்தும் அன்பின் அடிப்படையில் அது அடுத்தவர்களிடமும் தன் அன்பினை வெளிப்படுத்துகிறது. அக்குழந்தை வளர்ந்து பெரியவர் ஆகி தன் துணையிடம் செலுத்தும் அன்பு அங்கு காதல் எனும் பரிணாமத்தை அடைகின்றது. அது வானிலை புயல்கள், சவால்களை எதிர்கொள்வது போல் தன்னுடைய வாழ்க்கையின் சவால்களையும் பொறுப்புகளையும் அன்பினால் எதிர்கொண்டு முதுமையிலும் தனது பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு அன்பினை ஊட்டி வளர்ப்பதன் மூலம் நீடித்த உறவுகளின் ஒருங்கிணைந்த குடும்ப அலகை அன்பின் பல்வேறுபட்ட பரிணாமங்களால் வழி நடத்தி செல்கின்றது.. இங்கு பகிரப்பட்ட சிந்தனைகள், செயல்களில் தான் அன்பு தன் நெகிழ்ச்சியையும் சகிப்புத்தன்மையையும் காண்கிறது. இதனடிப்படையில் அன்பின் திறன் தனிநபர்கள் மற்றும் தம்பதிகள் தங்கள் ஆழ்ந்த தொடர்புகளை உருவாக்க ஏதுவாக அமைகிறது. பரஸ்பர மரியாதை, புரிதல் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு அடித்தளத்தை உருவாக்கி அதன் மோகத்தின் ஆரம்ப கட்டங்களைக் கடந்து வாழ்வின் இறுதி வரை செல்கிறது.

### கலாச்சார முன்னோக்குகள்

காதல் ஒரு உலகளாவிய நிகழ்வாக பல்வேறுபட்ட கலாச்சாரங்கள் முழுவதும் விதவிதமான வடிவங்களைப் பெறுகிறது. பாரம்பரியங்கள், சமூக விதிமுறைகள் மற்றும் வரலாற்று சூழல்கள் காதலில் தாக்கம் செலுத்துகிறது.

வெவ்வேறு சமூகங்கள் அன்பை எவ்வாறு கருத்தில் கொண்டு வெளிப்படுத்துகின்றன என்பதை ஆராய்வது இந்த உலகளாவிய நிகழ்வைப் பற்றிய நமது புரிதலை வளப்படுத்துகிறது. நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் முதல் திருமண சடங்குகள் வரை, கலாச்சாரக் கண்ணோட்டங்கள் காதல் உணரப்படும் மற்றும் அனுபவிக்கும் விதத்தை வடிவமைக்கின்றன.

இந்த மாறுபாடுகள் இருந்தபோதிலும், அடிப்படை மனித அனுபவமாக அன்பின் அடிப்படை சாராம்சம் ஒரு பொதுவான இழையாகவே உள்ளது. இது பல்வேறுபட்ட மனித கலாச்சாரங்களின் பன்முகத்தன்மைக்கு மத்தியில் ஒற்றுமை உணர்வை வளர்க்கிறது.



### நல்வாழ்வில் அன்பின் தாக்கம்

உடல் மற்றும் மன நலனில் அன்பின் நேர்மறையான தாக்கத்தை பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. மன அழுத்தத்தைக் குறைப்பது முதல் ஒற்றுமை உணர்வை வளர்ப்பது வரை, நிறைவான வாழ்க்கைக்கு அன்பு ஒரு சக்தி வாய்ந்த அமுதம் என்றே கூறலாம். நமது ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் அதன் பங்கை ஒப்புக்கொள்வது தனிப்பட்ட மற்றும் சமூகத்திற்கான முழுமையான அணுகுமுறையை ஊக்குவிக்கிறது.

இலங்கையில் திருமணம் மற்றும் காதல் ஆகியவை கலாச்சார, மத மற்றும் பாரம்பரிய காரணிகளின் கலவையை உள்ளடக்கியது. இதனடிப்படையில் சமூக இயக்கவியல் நடைபெறுகின்றது. இலங்கையில் திருமணம் மற்றும் காதல் தொடர்பான சில அம்சங்கள் இங்கே பெற்றோர்களால் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள், கலாச்சார மற்றும் மத வேறுபாடு, காதல் திருமணங்கள், குடும்பங்களின் தலையீடுகள், சட்டப்பூர்வ வயது மற்றும் ஒப்புதல், மற்றும் சமூக மாற்றங்கள் கொண்டு அமைகின்றன.


ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்களை நோக்கின் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் ஒரு பொதுவான நடைமுறையாகும். குடும்பங்கள், பெரும்பாலும் திருமண தரகர்களின் உதவியுடன் அல்லது குடும்பம் மற்றும் சமூக இணைப்புகளின் பட்சம் ஏற்பாடு செய்வதில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன.

நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் என்ற கருத்து இன்னும் நிலவினாலும், தனிநபர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் எந்த அளவு கருத்துக் கூறுவார்கள் என்பது மாறுபடும்.

காதல் திருமணங்கள் ஆனது சமீப ஆண்டுகளில் வெளிப்படையாகவே அதிகரித்துள்ளது. தனிப்பட்ட இணக்கம் மற்றும் பாசத்தின் அடிப்படையில் தனிநபர்கள் தங்கள் கூட்டாளர்களைத் தேர்ந்தெடுக்கும் காதல் திருமணங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றம் நகர்ப்புறங்களிலும் இளைய தலைமுறையினரிடையேயும் குறிப்பாக தெளிவாக புலப்படுகின்றது. இது உறவுகளுக்கு மிகவும் நவீனமான மற்றும் தனிப்பட்ட அணுகுமுறையை பிரதிபலிக்கிறது.

குடும்ப ஈடுபாடு என்பது காதல் திருமணங்கள் மிகவும் பொதுவானதாகி வரும் அதே வேளையில், குடும்ப ஆதரவும் அங்கீகாரமும் பல தனிநபர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது. காதல் திருமணங்களில் கூட திருமண செயல்பாட்டில் குடும்பத்தினரின் பங்களிப்பு முக்கியத்துவம் வகிக்கின்றது. பல சமூகங்களைப் போலவே, பாலினப் பாத்திரங்கள், உறவுகள் மற்றும் திருமணம் ஆகியவற்றில் உருவாகும் அணுகுமுறைகளுடன், இலங்கையும் மாறிவரும் சமூக இயக்கவியலை அனுபவித்து வருகிறது. பொருளாதார காரணிகள், கல்வி மற்றும் உலகளாவிய தாக்கங்களின் வெளிப்பாடு ஆகியவை இலங்கையிலும் இவ்வாறான மாற்றங்களுக்கு பங்களிக்கின்றன. ■




வெற்றிமணி திருமண சேவை

முதுகலைப்பட்டபடிப்புடன் கௌரவமான வேலையிலிருக்கும் மணமாகி விவாகரத்தான 40 வயதுடைய பெண்ணுக்கு பெற்றோர்கள் வரன் தேடுகின்றனர். வரன் லண்டன், யேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகளில் வசிப்பவராக இருக்க வேண்டும் .

தொடர்புகளுக்கு: 0049 1774219510

Woman , a postgraduate and having prestige job, 40+ of age. married and divorced. Her Parents seek groom from one of the following countries> London> Germany and Switzerland.

For Contacts. 0049 1774219510.

காதலர் தின வாழ்த்துக்கள் | Happy valentine's Day Feb.14



மாதவி

02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# அப்பவும் இப்பவும் என் பக்கத்து சீட் அவள்!

அதானால் அவளைக் கண்டதும் கண்டு கொண்டேன் யார் அவள் என்று. அருகில் அமர்ந்தவள், சீட் பெல்ட்டை போட்டுக் கொண்டு,கண்ணை மூடிக்கொண்டாள்.

அதனால், நானும் அவளை ஒரு கணம் சுகமாகத் திரும்பிப்பார்த்தேன். அவள் உதடுகள் மெதுவாக அசைந்தன.

அந்த உதட்டு அசைவில், அறுபது வருடங்களுக்கு முன் பாடிய தேவாரம் அது என்பதை இப்பவும் உணரமுடிந்தது.

நான் முன்பு அவள் தேவாரம் பாடும்போது என்ன செய்தேனோ அதே இடத்தில் நிற்பது போல் உணர்ந்தேன்.

ஒன்பது மணி நேரப் பயணம், அவள் ஒரு வார்த்தையும் பேசமாட்டாள், என அறிந்து, நானும் கண்ணை மூடினேன்.

கண்ணன்!

அந்தக் காயத்தின் தழும்பு இப்ப இன்னும் பெரிதாக முகத்தில் தெரியுது என்றாள். நான் குரல் வந்த பக்கம்திரும்பினேன்.

அது அவள் தான்.

கிரிக்கெட் விளையாடும் போது பந்து பட்டு முகத்தில் வந்த காயம் அது.

கண்ணன் நீங்கள் இரண்டு வாரம் பாடசாலைக்கு வரவில்லை. பிறகு நீங்கள் பாடசாலைக் கலை விழாவில் மீண்டும் கண்டேன். ஆனால் நீங்கள் வருவீர்கள் என்று அப்போ எனக்கு தெரியும். உங்கள் தங்கையிடம், நீங்கள் எப்படி வருவீர்கள்? என்று கேட்டேன். அண்ணாவுடன் வருவேன் என்றாள். நீங்கள் சுகமா இருக்கிறீங்கள் என்பதை ஒரே கேள்வியில் பதிலாக எடுத்திட்டேன்.


அட அன்று இரத்தம் சொட்டச் சொட்ட வகுப்பறையில் நின்றபோது எட்டியும் பார்காதவளாக இருந்தாள். இப்போ...

ஏய கொஸ்ரஸ். உங்களுக்கு என்ன யூஸ் வேண்டும் என்றாள். நானும் அவளும் ஒரே நேரத்தில் அப்பிள் யூஸ் என்றோம்.

வாழ்வில் இருவரும் ஒன்றாகச் சொன்னது இதுதான், என நான் எண்ணும் போதே அவள் தொடர்ந்தாள்.

விமானத்தில் தந்த கச்சான் கடலை. இது என்ன கடலை, பத்துக்குகூட இல்லை, இது பத்துமா உங்களுக்கு என்றாள்.

கண்ணன் உங்களுக்கு பத்துமா இது. கொஞ்சம் ஊண்டியே, ஒரு பூடகமாகக் கேட்டாள். கண்ணன்! நீங்கள் கடதாசியில் சுருட்டிவைத்த கச்சான் கடலையை அப்போ யாரோ எடுத்துவிட்டார்கள் என்று வகுப்பெல்லாம் தேட, பின் அவை உடைச்சு



கச்சானாக அதே சுருளுக்குள் இருக்க,எந்த மந்திரவாதி இப்படிப் பண்ணியது என்ற பக்கத்தில் உங்கள் நண்பனைக் கேட்க, எனக்கு எப்படி தெரியும் என்று அவன் கத்த, நீங்கள் முழிக்க....

இப்பவும் நான் அதே முழியோடு இருக்க, அவள் சொன்னாள். கச்சானை எடுத்து உடைத்து வைத்த, அந்த மந்திரவாதி அது தான் என்றாள். ஒரு கணம் என்னை வடிவாகப் பார்த்தாள், அட உங்கள் சேட்டுக்கு பொக்கற் இல்லை.இருந்தால் பேனா மை எப்பவும் முன்பு இருக்குமே!என்றாள். நான் இன்னும் மாதவியுடன் ஒரு வார்த்தை பேச வில்லை. முடியவும் இல்லை. அவள் விடாது பேசிக்கொண்டு இருக்கிறாள்.

கண்ணன் ஒரு முறை ரவுணுக்கை உங்கள் பாட்டாச் செருப்பு அறுந்துபோக, ஒரு பாட்டி வந்து செருப்புக்கு குத்த ஊசிதந்ததே! அந்த ஊசியை என் உள்பாவாடையில் இருந்து கழட்டிக்கொடுத்ததே நான் தான் என்றாள்.

மாதவி! இப்படி என் அசைவுகள் ஒவ்வொன்றும் உனக்கு தெரிந்து இருக்க, என்மீ தான உன் ஆசையை நான் தெரிந்து இருக்க வில்லை, என்று சொல்ல வாய் திறக்க,அதற்கும் அவள் விடவேயில்லை,... தொடர்ந்தாள். கண்ணன் உங்களுக்குத் தான் கணக்கு நல்லா வருமே, ஏன் அண்டைக்கு (அண்டைக்கு என்றால் அறுபது வருடங்களுக்கு முன்.) அந்த கணக்கு வாத்தியார் கேட்க தெரியாது மாதிரி நின்ற நீங்கள். எனக்கு தெரியும் அடுத்தது என்னைக் கேட்டால் நான் சொல்லட்டுமே என்றுதானே.

ஆனால் எனக்கும் விடை தெரியும் நீங்கள் சொல்லவில்லை, என்று, நானும் சொல்ல வில்லை. வாத்தியார் எங்கள் இருவருக்கும் என்ன நடந்தது என்று பொருஞ்சு தள்ளினார்.

கண்ணன்! என்னடா கண்ணன்!! கண்ணன்!!! என்று தினமும் பேசும் ஒரு வருடன் போல் பேசுகிறேன் என்று நினைக்கிறீங்களா? என்னுடைய மகளை நான் கண்ணன் என்றுதான் கூப்பிடுவேன் என்றாள். நான் என் மகளை மாதவி என்று அழைப்பதை அவளுக்கு சொல்ல விருப்பமில்லை. ஏன் என்றால், கண்ணன் என்று அவள் கூப்பிடுவது என் நினைவாக இருக்காது, ஏன் என்றால் அது எல்லா அம்மாக்களும், பிளைகளை, குஞ்சு, குட்டி, என்பது போல் கண்ணன் என்று அழைப்பதும் புதுசு இல்லை. நான் மாதவி என்றது பிறருக்குக் கோவலன் மாதவி என்றாகத் தெரிந்தாலும், எனக்கு பக்கத்தில் இருப்பவர்தான் அந்த மாதவி.

கதைப்பாளோ கதைப்பாளோ என எண்ணிய மாதவி,இப்போ கதைத்துக் கொண்டே இருக்கிறாள்.

அந்தக்காலத்து பெண்கள் எல்லாம் ஒரு வயதுக்குப்பின், ஆண் பெண் என்ற உணர்வு நீங்கி, மனிதர்கள் நாம் என்ற உணர்வோடு எல்லோருடனும் கதைப்பார்களோ.

ஆனால் ஒன்று! வார்த்தை தடுமாறித்தன்னும் ஒரு வார்த்தை உங்களை விரும்பினேன் என்று நேரடியாக அவள் கூறவேயில்லை. அது பெண்களுக்கே உரிய பண்பு தான். உங்களுக்கு கச்சான் பிடிக்கும்தானே. தான் கொண்டு வந்த கச்சான் கடலை பைக் கற்றை உடைத்து எனக்கு நீட்டுகிறாள்.

அன்றும் அவள் பக்கத்து சீட்தான். இப்பவும் அவள் பக்கத்து சீட்தான்.

அப்போதும் எட்டி நீட்டுற தூரம்தான்.

இப்பவும் அப்படித்தான்.

பெற்றுக் கொண்டேன். சாமி தந்த இந்த வரத்தை, அப்ப தரவில்லையே என எண்ணமுடியவில்லை. காரணம், எம்மைப் பிரித்தாலும் இருவருக்கும் அழகிய வாழ்வைத் தந்ததுதான்.

**பின்.குறிப்பு :** அன்று பாடசாலையில் அதிகம்பாடிய தேவாரமும், இன்று விமானத்தில் என்னைக் கண்டதும் முதல் இதழுக்குள் உச்சரித்த தேவாரமும் இதுதான். திருஞானசம்பந்தரின் 'காத லாகிக் கசிந்து கண்ணீர்மல்கி.'

AI சித்திர உதவி: பூங்கோதை

Münster க்கு அருகாமையில் Warendorf நகரில்....
RESTAURANT
Westfälischer Hof
Saal Und Restaurant!
Telefon: +49 2584 9348481



Bartholomäusstraße 29, 48231
Warendorf, Germany
உங்கள் நிகழ்ச்சிகளை அழகுடனும் சுவையுடனும் செய்திட
எமது மண்டபம் அழைக்கிறது
பிறந்த நாள், நத்தார் தினக் கொண்டாட்டம், திருமண விருந்து
மற்றும் எந்தச் சிறப்பு நிகழ்வுகள் என்றாலும் எம்மிடம்
உணவு சிற்றுண்டிகள் உட்பட யாவும் செய்து தருகின்றோம்.
விருந்தினர்கள் விளையாட Kegelbahn ம் உண்டு.
அழகிய மண்டபம் தொடர்புகளுக்கு 01794855554
Restaurant 60 Sitzplätze | Kegelbahn 30 Personen
Biergarten kann 200 Plätze
Saal 300 Plätze


Öffnungszeiten: Geöffnet . Schließt um 23:00| Telefon: +49 2584 9348481

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ‘தினமும் அஸ்பிரின்



பக்கவாதம் மாரடைப்பு வருவதற்கான சாத்தியத்தை அதிகரிக்கக் கூடும் என சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வேறு நோய்களுக்காக சத்திரசிகிச்சைக்கு செல்ல வேண்டி நேர்ந்தால் இதனை ஒரு வாரத்திற்கு முன் நிறுத்த வேண்டியிருக்கும். நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மருத்துவரின் ஆலோசனை பெறுங்கள். பாரிய சத்திரசிகிச்சைகளுக்கு மாத்திரமின்றி பல் பிடுங்குவது போன்ற சாதாரண சத்திர சிகிச்சையாக இருந்தாலும் நீங்கள் தினம் அஸ்பிரின் எடுப்பதை மருத்துவரிடம் முற்கூட்டியே சொல்ல மறக்க வேண்டாம்.

### பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படாதா?

தினமும் அஸ்பிரின் சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் ஏதும் ஏற்படாதா? எல்லோருக்கும் இது உகந்ததா? பெரும்பாலானவர்களுக்கு இதனை உட்கொள்வதில் எத்தகைய பிரச்சனைகளும் ஏற்படாது. ஆயினும் கீழ் கண்டவர்கள் விடயத்தில் அவதானம் தேவை.

அஸ்பிரின் மருந்திற்கு ஒவ்வாமை (Allergy) உள்ளவர்கள் அதனை எடுக்கக் கூடாது. குடற்புண் உள்ளவர்கள் அதிலும் முக்கியமாக அதிலிருந்து இரத்தக் கசிவு ஏற்பட்டவர்கள் எடுக்கக் கூடாது. பக்க வாதத்தில் இரண்டு வகை உண்டு. முன்னர் கூறியவாறு குருதி உறைதலால் ஏற்படுபவர்களுக்கு இது நல்லது. மாறாக குருதிப் பெருக்கால் பக்கவாதம் ஏற்படுபவர்களுக்கு இது நோயைக் கூட்டக் கூடும். இதனை சி.டி ஸ்கான் போன்ற பரிசோதனைகளாலேயே கண்டு கொள்ள முடியும். அத்துடன் குருதி உறைதல் குறைபாடு நோயுள்ளவர்களும் உபயோகிக்கக் கூடாது. அஸ்பிரின் மாத்திரைகளை உட்கொள்பவர்கள் மதுபானம் அருந்துவதை மிகவும் குறைக்க வேண்டும். ஏனெனில் இரண்டும் சேரும்போது மருந்தின் செயற்பாட்டு வீச்சு அதிகரிப்பதுடன் இரைப்பைக்கும் கூடிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

### மாரடைப்பின்போது

ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டதற்கான அறிகுறிகள் திடீரென தோன்றினால் ஒரு சாதாரண அஸ்பிரினை உடனடியாக மென்று விழுங்க வேண்டும் என மருத்துவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். அல்லது மேற் கூறிய குறைந்த வலுவுள்ள அஸ்பிரினில் நான்கு உடனடியாக எடுக்க வேண்டும். தினமும் அஸ்பிரின் மாத்திரை எடுப்பவர்களுக்கும் இது பொருந்தும். மென்று விழுங்கும் போது அஸ்பிரின் விரைவில் குடலிலிருந்து உறிஞ்சப்பட்டு உடனடியாகச் செயற்படும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

ஆயினும் பக்கவாதம் ஏற்பட்டால் மாரடைப்பிற்கு எடுப்பதுபோல உடனடியாக அஸ்பிரின் எடுக்கக் கூடாது.

ஏனெனில் எல்லாப் பக்கவாதங்களும் குருதி கட்டிபடுவதால் ஏற்படுவதில்லை. சில சிறு இரத்தக் குழாய்கள் வெடிப்பதால் ஏற்படுகின்றன. அவ்வாறானவற்றுக்கு அஸ்பிரின் கொடுத்தால் குருதி கசிவது அதிகமாகி நோய் தீவிரமடையும்.

### புதிய மருந்து

இப்பொழுது குருதி உறைதலைக் குறைக்கும் அஸ்பிரின் மருந்திற்கு பதிலாக புதிய வகை மருந்தான குளபிடோகிறில் (clopidogrel) பாவனைக்கு வந்துள்ளது. இது சற்று அதிக விலையானது. அஸ்பிரின் மருந்தால் பக்கவிளைவு ஏற்படுபவர்களுக்கு ஏற்றது. அத்துடன் பல தருணங்களில் அஸ்பிரி னுடன் சேர்த்தும் மருத்துவர்கள் கொடுக்கிறார்கள். மருத்தவ விஞ்ஞானம் அதீத வளர்ச்சி கண்டுள்ள இன்றைய கால கட்டத்திலும் அஸ்பிரினின் உயிர் காக்கும் ஒளடதமாகக் கைகொடுப்பதுடன், எளிதாகக் கிடைப்பதும், எல்லோருக்கும் கிட்டக் கூடிய விலை குறைந்த மருந்தாக இருப்பதும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய விடயம் என்பதில் சந்தேகம் இல்லை.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பாதி நிறைந்த என்...

நேர்மறைச் சிந்தனை கொண்ட உங்கள் நட்புகள் உங்களை வந்தடைவார்கள். நல்ல முயற்சிகள் நற்சிந்தனை கொண்டவர்களின் உதவியுடன் விரைவில் நடந்தேறும்.

நேர்மறைச் சிந்தனைகள் குறித்து பல சுவையான நூல்கள் அண்மைக்காலத்திலும் வந்திருக்கின்றன. அவற்றில் சிலவற்றைப் பதிவு செய்துள்ளேன். முடிந்தால் இணையத்தில் வாசித்துப் பயன்பெறுங்கள்.

Brow, R.E ( 2023 ) The Art of Positive Thinking: Eliminate Negative Thinking I Emotional Intelligence I Stop Overthinking: A Self Help Book to Developing Mindfulness and Overcoming Negative Thoughts.

Peale, V.N ( 2023 ) Words of Wisdom: A Daily Book of Inspirational Quotations: 365 The Power Of Positive Thinking

Steve, M. (2023 ) Powerful Quotes to Inspire> Motivate and Help You Find Joy and Fulfillment in Life

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பழைமை அழிவதில்லை

என் கண்களுக்குத் தப்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஏன் என்ற கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உங்கள் கண்களுக்கு முன்னே எத்தனையோ நுண்ணுயிர்கள் நடந்து கொண்டு திரியும். தூசிகள் பறந்து கொண்டிருக்கும். உங்களுடய முகத்திலும் உடலிலும் உங்களுடைய இறந்த செல்களையும் இறந்த தோல்களின் சொடுகுகளையும் உண்பதற்காக எத்தனையோ நுண்ணுயிர்கள் நடந்து கொண்டே இருக்கும். இதனைப் பார்த்துக் கொண்டு உங்களால் வாழ முடியுமா? அப்படியே ஆனால் எல்லோரும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவே வாழ்வார்கள்.எனவே அனைத்தும் காரண காரியங்களுடனேதான் படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆழமான வாசிப்பும் அதன் தூண்டுதலினால் ஆழமான சிந்தனை ஆற்றலும் பயன்படுத்தப்படும் போது படைப்புக்கள் காலம் கடந்து வாழும்.

> *என்னை நன்றாக*
> *இறைவன் படைத்தனன்*
> *தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு*

என்று திருமூலர் சொல்வது போல கூட்டுக்குள் நின்றாலும் சிட்டுக்குருவி தமிழ்ப் பாட்டுப் பாட மறுப்பதில்லை என்று தமிழ் செய்யுங்கள். எழுத்தென்னும் ஆயதமே உங்கள் இதயத்தையும் பிறர் இதயத்தையும் திறக்கும் ஆயுதம். எழுத்துக்குத் திரை போட்டு மூடாமல் வெளிவரும் இலக்கியங்கள் காலங்கடந்தும் வாழும். காலம் வலிகள் மட்டுமே தரவில்லையே. காலம் தந்த கிலுகிலுப்புக்கள் நிறையவே பாதை எங்கும் இருக்கும். அவை மனதுக்குள் இதமான எண்ணங்களை உருவாக்கி மிதமிஞ்சிய வாழ்நாளை வளமாக்க படைப்புக்கள் வெளிவரட்டும்.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நிற்கக்கூட நேரமில்லை

செய்துமுடிக்கவேண்டிய வேலைகளை எய்துமுடிக்காமல் அதனால் ஏற்படும் தேவையற்ற டென்ஷன்களை எதிர்கொள்ளவேண்டியதுமில்லை.

உண்மையில் நேரமில்லை என்று கூறவும் நமக்கு ஒரு தகுதி வேண்டும் ஆனால், அதற்கான தகுதி நம்மில் பெரும்பானவர்களுக்கு இல்லை என்பதே நிதர்சனம். நேரத்தைச் சரியாகத் திட்டமிட்டு, எவ்வளவு நேரம் மீதி உள்ளது என்று கணக்குப்போட்டு பார்த்தால், கிறுகிறுத்து போய்விடும்நமக்கு. ‘என்னடா இது! இவ்வளவு வெட்டியாகவா இவ்வளவு நாளை வீணடித்து இருக்கிறோம்!‘ என்று அதிர்ச்சியாக இருக்கும்.நேரத்தைத் திட்டமிடாததால், காலம் மட்டும் வீணாவதில்லை அதனோடு பல்வேறு மற்ற தேவையற்ற பிரச்சினைகளும் சர்ந்தே வரும். உதாரணத்திற்கு ஏதேனும் பயணம் செல்லுபவர்களாகவோ, அலுவலகம் செல்லுபவர்களாகவோ ஏன் பாடசாலை செல்லுபவர்களாகவோ இருந்தாலும், முந்தைய இரவே அடுத்த நாள் எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை எடுத்து வைத்து விட்டால், காலையில் அவசர அவசரமாகத் தேடிக்கொண்டு இருக்க வேண்டிய தேவையிராது. ஆனால், இப்படியா நடக்கிறது?

எல்லாவற்றிலும் தாமதம், அதனால் அவசரம், அதனால் சண்டை, அதனால் மனவருத்தம். இதைச் சரி செய்யச் சிறு திட்டமிடல், முன்னேற்பாடு போதுமானதுதான்.ஆனால், இதைச் செய்ய முயற்சிக்காமல் தினமும் ஒவ்வொரு நாளையும் நிம்மதியற்று பலர் கடந்துகொண்டிருக்கின்றோம். சிறு திட்டமிடல் நமக்கு மகிழ்ச்சியைத் தரும், கோபத்தைப் பதட்டத்தைத் தவிர்க்கும் என்பது எத்தனை முறை பிரச்னையானாலும் நம்மில் பலருக்கு புரிவதில்லை.

ஒவ்வொரு தனி மனிதனின் வளர்ச்சியும் வெற்றியும் அவன் நேரத்தையும் காலத்தையும் கையாளும் விதத்தைப் பொருத்த்தே அமைந்துள்ளது.“நேரம் என்பது நேர்கோட்டில் இயங்குகின்றது அது ஒரு போதும் ஆரம்பப் புள்ளியை சந்திக்காது!








# அன்னமிட்ட கலைஞன் விஜயகாந்த்

## ஓர் அஞ்சலிக் குறிப்பு



ரூபன் சிவராஜா
(நோர்வே)

பதின்ம வயதில் என்னை ஈர்த்த திரைநாயகர்களில் விஜயகாந்த் முக்கியமானவர். அவரது கம்பீரமும் வசீகரமும் மிக்க தோற்றம், ஏற்று நடித்த பாத்திரங்களும், புரட்சிகரமான வசனங்களைப் பேசியமையும் அவரைப் பிடித்துப் போனமைக்கான முக்கிய காரணங்கள். இயல்பான முகபாவங்களும் பாத்திரங்களுக்கேற்ற உடல்மொழியையும் அவரின் திரைப் பிரசன்னத்திற் காணலாம். பாடற் காட்சிகளில் எளிமையும் சின்னச் சின்ன மேனரிசங்களும் இரசனைக்குரியவை.

சினிமாவை ரசிக மனநிலைக்கு அப்பால் விமர்சனக் கண்ணோட்டத்தோடும் ரசனை மாற்றத்தோடும் பார்க்கத் தொடங்கிய காலங்களில் முன்னைய அத்தகைய ஈர்ப்பு மங்கிப் போனது. ஆனாலும் விஜயகாந்த் கவனத்திற்குரிய நடிக




ராகவே இருந்துள்ளார். நட்சத்திர அந்தஸ்து மிக்க நாயகனாக விஜயகாந்தின் வளர்ச்சியும் நிலைகொள்ளலும் மக்கள் செல்வாக்கும் அபரிதமானவை.

திரைக் கலைஞர்களின் நலன்களுக்காக அவர் ஆற்றிய பணிகள் பலராலும் அடிக்கடி விதந்துரைக்கப்படுகின்றன. தன் படங்களை இயக்குவதற்குரிய வாய்ப்பினைக் கொடுத்து இவர் அறிமுகப்படுத்திய இயக்குனர்களின் எண்ணிக்கையே ஐம்பதைத் தாண்டும். திரைப்படக் கல்லூரியில் கற்ற திரைக்கலை மற்றும் தொழில்நுட்பக்கலைஞர்கள் பலருக்கும் தன் படங்களில் வாய்ப்புக் கொடுத் திருக்கின்றார். அவரின் மனிதநேயம், உதவி செய்கின்ற இயல்பு, சவாலான காரியங்களில் இறங்குகின்ற துணிச்சல் குறித்தும் திரையுலகைச் சார்ந்த பலர் சிலாகித்துப் பேசிய கருத்துகள் வலையொளித் தளங்களில் நிறைந்து கிடக்கின்றன. அரசியலிற்கூட ஜெயலலிதா, கலைஞர் ஆகியோர் கோலோச்சிய தருணத்திலேயே துணிந்து களமிறங்கியவர். சரியான ஆலோசனைகளும் கொள்கை ரீதியான அடித்தளங்களும் வழிநடத்தல்களும் இருந்திருந்தால்– அல்லது குறைந்தபட்சம் உடல்நிலை சீராக இருந்திருந்தால் இன்று தமிழக அரசியலில் முதன்மைச் சக்தியாக இருந்திருக்கக்கூடியவர்.

அவருடைய ஆகப்பெரிய பண்பாக திரையுலகத்தோரால் தவறாது சொல்லப்படுவது அவருடைய வீட்டுக்கோ, அலுவலகத்திற்கோ சென்றால் உணவளித்து உபசரிக்காமல் எவரையும் அனுப்பமாட்டார் என்பதாகும். அதுமட்டுமல்லாமல் தனது படப்பிடிப்புத் தளங்களிலும் அனைத்து ஊழியர்கள் முதல் கலைஞர்கள் வரையான அனைவருக்கும் ஒரே மாதிரியான சிறப்பான உணவுகளை வழங்க வேண்டுமென்பதை விடாப்பிடியாகத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தவர். கிட்டத்தட்ட ஒரு சமபந்திப் போசனையைத் திரைத்துறையில் உருவாக்கியவர். ஏனைய தயாரிப்பு நிறுவனங்களும் அதனை ஒத்த உணவு வழங்கல் நடைமுறையைப் பின்பற்ற இவரது செயல்கள் நிர்ப்பந்தித்தன என்றும் சொல்லப்பட்டது.

தமிழகத்திற்கு அகதியாகச் சென்ற ஈழத்தமிழர்கள், அங்கு தங்கியிருந்த இயக்கப் போராளிகள் உட்பட்டவர்களுக்கும் உணவளித்திருக்கின்றார் என்பதை நேரடியாகச் சிலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். இன்றும் பலர் முகநூலில் அவ்வாறான தம் அனுபவங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அரசியலில் எதிர்க்கட்சி நிலைக்கு வந்த சமகாலத்திலேயே அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்படத்



தொடங்கிவிட்டது. அத்தருணங்களில் அவருடைய பேச்சில் ஒரு வகையான நினைவுத் தழும்பல் ஏற்படத்தொடங்கியிருந்தது. அதனை அவர் குடிபோதையில் உளறுகின்றார் என்றவாறான இழிவுபடுத்தல்களாக ஊடகங்களும், சமூக வலைத் தளங்களும் சித்தரித்தன. மீம்ஸ் என்ற பெயரில் அவரை வைத்து வெளிவந்த கேலியுருவகங்களை இந்தத் ‘தமிழ் கூறும் நல்லுலகம்‘ ரசித்தது என்பதும் கசப்பான உண்மை.

விஜய், சூர்யா போன்றவர்களின் ஆரம்பக்கட்டத்தில் ரசிகர்கள் மத்தியில் அவர்கள் பரவலாக அறியப்படுவதற்கு இவருடைய நட்சத்திர வியாபார அந்தஸ்து பயன்பட்டது. (செந்தூரபாண்டி, பெரியண்ணா திரைப்படங்கள்) நோயி



னால் உடல்நலம் குன்றிய இறுதிக் காலங்களில் அரசியலுக்காக அவரை மேடையிற் காட்சிப்பொருளாக்கி கஸ்ரப்படுத்தினர் குடும்பத்தினர். ஒரு கலைஞனை, கம்பீரமான ஆளுமையை அப்படிக் காணநேர்ந்தமை அனைவருக்கும் சங்கடத்தை ஏற்படுத்தியது. நோயின் அவஸ்தைகளிலிருந்து நீங்குதல் எனும் வகையில் மரணம் அவருக்கு விடுதலை!

கலைஞனாக, அரசியற் கட்சித் தலைவனாக எனப் பல வகைகளில் நினைவுகூரப்படுவார். இவற்றைத் தாண்டி ‘அன்னமிட்ட கை‘ என்ற ஒற்றை விம்பத்தின் ஊடாக அவர் அதிகம் நினைக்கப்படுவார் என்று தோன்றுகிறது.

அஞ்சலிகள்



தென்னிந்திய திரைப்பட நடிகர்கள் ஈழத்தமிழர்களுக்கான உண்ணாவிரதத்தில் விஜயகாந்த்...

தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
“பண்டாரவன்னியன் புத்தகசாலையில்”
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.




தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616
youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளைஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

# தாயகத்தில் போதை மருந்து ஒழிப்புப் பணிக்காக யேர்மனியில் நடைபெற்ற 'இசைச்சுவடுகள்' நிகழ்ச்சி









கடந்த 21.01.2024 யேர்மனியில் தாயகத்தில் போதை மருந்தின் கோரப்பிடியில் இருந்து எம்மினம் காக்க மாபெரும் முயற்சியில் யாழ். மருத்துவ பீட பழைய மாணவர் சங்கம், யாழ் மருத்துவ பீடம், தாயக மருத்துவர்களுடன் இணைந்து முன்னெடுத்த பெரும் பணி இது.

எமது சமூகத்தில் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு, மறுவாழ்வு அளிக்க இசைச் சுவடுகள் என்ற நிகழ்ச்சி இடம் பெற்றது.

இந் நிகழ்ச்சி மூலம் பெறப்பட்ட நிதி தாயகத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மறுவாழ்வு திட்டத்துக்கு பயன் பெறும்.

மாபெரும் ஆதரவு தந்த மக்களுக்கும், கலைஞர்கள், நிகழ்ச்சி அமைப்பாளர்கள், வைத்தியர்கள் யாவருக்கும் நன்றியும், பாராட்டுக்களும்.


DEVI FUNERAL SERVICE
Devi-Bestattungen



உறவுகள் பிரியும் போது
கவலைகளை சுமக்கின்றோம்

OPEN 24 HOURS
7 DAYS

உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் நீங்கள் அமைத்திட 24 மணி நேர குடும்பம் சார் சேவைகளை நாங்கள் செய்யக் காத்திருக்கின்றோம்.

நீங்கள் எங்களை தொலைபேசியில் அழைத்து எம்மிடம் ஆலோசனை பெறுங்கள்

எமது சேவைகள்
- உலகெங்கும் அனுப்பிவைத்தல்
- எரிக்கும் இறுதிச்சடங்குகள்
- நிலத்தில் தாக்கும் சடங்குகள்
- விசேட இறுதிச்சடங்கு வகைகள்
- சமூகப்பணத்துடனான இறுதிச்சடங்குகள்
- நாங்கள் ஈமைக்கிரியை சேவைகளை உங்களுக்கு அண்மையாக உள்ள இடத்திலிருந்தும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் வழங்குவோம்

- வீட்டு வருகைகள்
- வார இறுதி வருகை
- துவைத்து உடை
- கலசம் அனுப்புதல்

Devi-Bestattungen
devi-bestattungen.de
info@devi-bestattungen.de
0157 54292746



ALL RELIGION RESPECTED



# அன்னை இல்லம்: நாகேஷை கண்டித்த தணிக்கை அதிகாரி!

'அன்னை இல்லம்' படத்தின் சிவாஜி – முத்துராமன் கல்யாண்குமார் நடித்த 'மணி ஓசை' மூலம் இயக்குநராக அறிமுகமான பி.மாதவன், அடுத்து இயக்கிய படம், 'அன்னை இல்லம்'.ஆரூர்தாஸ் வசனம் எழுத, கே.வி.மகாதேவன் இசை அமைத்தார்.

சிவாஜி கணேசனுடன், தேவிகா, முத்துராமன், எஸ்.வி.ரங்காராவ், எம்.என்.நம்பியார், வி.கே.ராமசாமி, நாகேஷ், ஜெயந்தி, சச்சு, ஓ.ஏ.கே. தேவர் உட்பட பலர் நடித்திருந்தனர். சிவாஜி கணேசனின் சொந்த வீட்டுப் பெயரையே இந்தப் படத்துக்குத் தலைப்பாக வைத்தனர். சிவாஜி, ரங்காராவ், தேவிகா ஆகியோரின் நடிப்பு இதில் பேசப்பட்டது. நாகேஷ் திக்குவாய் கொண்டவராக நடித்திருப்பார். இப்படி பேசி நடித்ததன் மூலம் திக்குவாய் கொண்டவர்களை வேதனை பட வைத்துவிட்டதாகக் கூறி, அப்போதைய தணிக்கை அதிகாரி சாஸ்திரி, நாகேஷை நேரில் அழைத்து கண்டித்தார்.


கண்ணதாசன் வரிகளில் 'எண்ணிரண்டு பதினாறு வயது', நடையா இது நடையா ஒரு நாடகமன்றோ நடக்குது', 'மடி மீது தலைவைத்து விடியும் வரை தூங்குவோம்', என்பது உட்பட பாடல்கள் மெகா ஹிட். அப்போது, சென்னை வானொலியில் இரவு 11 மணிக்கு மேல் அதிக முறை ஒலித்த பாடல், இந்தப் படத்தின் 'மடி மீது தலைவைத்து'. இப்போது கேட்டாலும் புது உணர்வை தரும்.



# கமல் ஜோடியாகும் ஐஸ்

மணிரத்னம் இயக்கிய இருவர், குரு, ராவணன், பொன்னியின் செல்வன் என பல படங்களில் நடித்தவர் பொலிவுட் நடிகை ஐஸ்வர்யா ராய்.

இந்நிலையில் நாயகன் படத்தை அடுத்து மீண்டும் கமலை வைத்து மணிரத்னம் இயக்கும் தக்லைப் படத்திலும் ஐஸ்வர்யா ராய் நடிக்கப்போவதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த படத்தில் கமலுடன், திரிஷா, ஜெயம் ரவி, துல்கர் சல்மான், கௌதம் கார்த்திக், ஜோஜு ஜார்ஜ் உள்ளிட்ட பலர் நடிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்து ஐஸ்வர்யா ராயின் பெயரும் அறிவிக்கப்பட உள்ளது. அப்படி இந்த படத்தில் அவர் இணைந்தால் கமலுக்கு ஜோடியாக ஐஸ்வர்யாராய் நடிக்கும் முதல் படம் இதுவாக இருக்கும்.



# சூர்யாவுடன் அதிதி ஷங்கர்



நடிகர் சூர்யா சிறுத்தை சிவா இயக்கும் கங்குவா படத்தில் நடித்து முடித்துள்ளார். விரைவில் அவர் சுதா கொங்கரா இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க உள்ளார்.

இந்த படத்தையும் சூர்யாவின் 2டி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனமே தயாரிக்க உள்ளது. படத்தின் ப்ரமோஷன் வீடியோவில் புறநானூறு என்ற பெயர் இடம்பெற்றிருந்தது.

இந்த படத்தில் துல்கர் சல்மான் மற்றும் நஸ்ரியா ஆகிய இருவரும் நடிக்கவுள்ளனர்.

இந்நிலையில் இப்போது இந்த படத்தில் நடிகை அதிதி ஷங்கர் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதிதி ஏற்கனவே விருமன் மற்றும் மாவீரன் ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ளார்.

# கமலின் 237 ஆவது படம்

இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில், கமல்ஹாசன் இந்தியன் -2 படத்தில் நடித்துள்ள நிலையில், பல முன்னணி நாயகர்களின் படங்களுக்கு சண்டை இயக்குநர்களாக பணியாற்றிய அன்பறிவ் என்று அழைக்கப்படும், அன்புமணி மற்றும் அறிவுமணி ஆகிய சகோதர்கள் இயக்கவுள்ள ஒரு புதிய படத்தில் கமல் நடிக்கவுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நடிகர் கமல்ஹாசனின் 237 ஆவது படமாக இது உருவாகவுள்ளதாகவும், இப்படத்தை அன்பறிவ் இயக்கவுள்ளதாக கமலின் ராஜ்கமல் பிலிம்ஸ் இண்டர்நேசனல் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியிட்டு உறுதி செய்துள்ளது.







Jasmine Silk House
ஆடைகளின் ராணி
திருமண பட்டுப்புடவைகள் புத்தம்
புதிய டிசைன்களில் மங்கையர் மனங்கவரும்
சேலைகள் சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
குர்த்தாக்கள், இன்னும் இமிற்ரேன் நகைகள் அனைத்தும்
ஒரே இடத்தில் பெற்று மகிழ நாடுங்கள்.
இனிய காதலர் தின வாழ்த்துகள்
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Kfz-Ingenieurbüro
NADANAM
Sachverständiger | Unfallgutachter
SIE HATTEN EINEN UNFALL? WIR HELFEN!
வாகன விபத்தா? உங்களில் தவறு இல்லையா?
கட்டணம் எதுவுமின்றி நாங்கள் உதவுகிறோம்!
விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கான தொகையை
மிகக் குறுகிய காலத்துக்குள் மதிப்பீடு செய்து தருவோம்.
உடனே எங்களை நாடுங்கள்.
B.Eng. Diesanth Nadanapatham
0175 5086977


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
இனிய காதலர் தின வாழ்த்துகள்
Ludwig str.87a
70197
Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிற்ரேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Stuttgart நகரில்...
SALE
Tel: 0711 615 8976/ 0170 334 4059


வெகு விரைவில் Dortmund நகரில்....
KANTHAN JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
OPENING SOON
Tel : 01728684 203
Rheinische.str.72 | 44137.Dortmund | 0049.1728684203 | Germany


FRANKFURT நகரில் புதிய உதயம்
இலங்கை,
இந்தியாவிற்கான
விமான சிட்டைகள்
குறைந்தவிலையில் துரிதமாக
பெற்றுக்கொள்ள
TRUST TRAVELS Reisebüro
Mob: 017 645656520 Tel: 069 24 24 8079
Inhaber : ஜெயக்குமார் வினோத்குமார்
TRUST TRAVELS
அத்துடன் துரித
பணப்பரிமாற்று
சேவையையும்
பெற்றுக்கொள்ளுங்கள்


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அ.க.ம்
Nila
Double Horse
Aachi
BTM
Raheena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698
இனிய காதலர் தின வாழ்த்துகள்